# நந்தலாலா

Dec 94 - Feb 95



* தாத்தாவுக்கு ஒரு ரகசியக் கடிதம்
* கேகாலை கைலைநாதன்— தூரிகை
* நடேசனின் மலையக வரலாற்று நூல்—குறிப்பு
* மண்டேலா — வாழ்த்துக்களுடன் ஓர் விசாரிப்பு

காலாண்டு கலை இலக்கிய சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dec 94- Feb 95

## தீக்குள் விரலை வைத்தால்....

உள்ளே..........

* சிறுவன் ....... 3

* வாழ்த்துக்களுடன் ஓர் விசாரிப்பு ....... 9

* திசையழிந்த அத்துவான வெளியில் ....... 12

* தூரிகை ....... 21

* பசும் புற்றரையின் விளிம்போரமாய் ஒரு விருட்சம் ....... 31

அமைப்பு

ரஞ்சகுமார்

Nandhalala

133-1/1,Dimbula Road,

Hatton

வணக்கம்.

ஓர்
பதினேழு வருட காலப்பகுதி
மிகுந்த இருண்ட நாட்கள்
என்பதில் சந்தேகமில்லை.
முதிர்ந்த பாசிஸத்திற்கும் இந்த
காலப்பகுதிக்குமான எல்லைக் கோட்டை
காண்பதிலுள்ள சிரமத்தை விட
ஒப்புவமைகளைக் கண்டு கொள்ளுதல்
எளிதாய் அமையும். கொன்று குவிக்கப்பட்ட
மனிதர்கள் போக, நந்தலாலாவின்
நாடக விழாவாகட்டும், நடேசனின்
மலையக வரலாற்று நூல் வெளியீடாகட்டும்-
வரையறைக்குள், இப்பாசிஸத்தின்
கனதியான பரிமாணங்களை தனிப்பட்ட
முறையில் நாம் தரிசிக்க தவறவில்லை.
ஆனால்,
ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை பெரும்பான்மையாகக்
கொண்டதோர் சமூகத்திலிருந்து
நந்தலாலாவின் செயல்பாடுகள் ஜீவிதம் கொள்வது
எமக்கு வாய்ப்பாகியது.
அதனாலோ, என்னவோ எமது செயல்பாடுகளுக்கு
வியூகம் அமைத்த அத்தொழிலாளியின்
படைப்புகளுக்கும், அவர்களை சார்ந்த
தத்துவங்களுக்கும் வந்து சேரும் தூற்றுதலுக்கும்,
அவமானங்களுக்கும் வியூகம் அமைக்கின்ற
பணியில் நாமும் பங்கேற்பதில் இயல்பாகவே
பெருமை பூண்டோம்.
வானம், எத்தனையோ பிரளயங்களை
மனிதனுக்கு நிகழ்த்தி காட்டியிருக்கின்றதுதான்.
ஆனால், அதனையும் மிஞ்சிய
பிரமாண்டங்களை அவ்வகண்ட
வானுக்கு நிகழ்த்தி காட்டியுள்ளவன்தான்
மனிதன்.
பாரதி முதல் இன்று வரை நாமும்
எம் எழுத்துக்களும் அம்மனிதனுக்காய்
என்றும் வணக்கம் செலுத்தும்.
இதுவே எமது அடிப்படை என்பதில்
பெருமை என்பதைவிட பிறிதென்ன
மிஞ்சுவது.

-வாழ்த்துக்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா

இதயமும் இதயமும் பேசிக்கொள்ள
ஆயிரம் தடைகளா?
உலகம் ரெம்பவும் அசிங்கமானது.
வா, என் சகியே
நாம் உயரே செல்வோம்.
ஒளியும் இல்லாத
ஓசையும் இல்லாத
இருளுக்குள் தனித்திருப்போம்.
உனக்காய் நானாக,
எனக்காய் நீயாக,
என்றும் என்றும்
என்றென்றைக்குமாய்...

வா!
இவ் உலகத்தின் நியதிகள்
வரையறை போட்ட
முட்கம்பிகளைக் கடந்து..

மனித சஞ்சாரமற்ற வான்வெளியில்
நாம் பறப்போம்.

நேற்றய நினைவுகளையும் நாளையையும்
நாம் மறப்போம்.

எதுவுமே வேண்டாம்.

நீயும் நானும்தான் வாழ்க்கை.
நீயும் நானும்தான் உலகம்.

என் ஆத்மாவின் அகம்பூராவும்
நின் நினைவுகள் மட்டுமே
நிறைந்திருக்கட்டும்.

என் ஒவ்வோர் சுவாசத்திலும்
உன் பெயர் மட்டுமே உச்சரிக்கப்படட்டும்
உயிர் உருகுகின்ற வேதனையை
கண்கள் துளிநீராய்ப் பனிக்கின்ற வேளை
உன் உதடுகளல்லவா
எனக்கு இதமான ஒத்தடங்கள்.

ஓ இனியவளே!
உனை என்றென்றும் பிரியாது
என் இதயத்தின் அருகே நான்
சேர்த்திருப்பேன்.

ஒரு பூப்போல,
என்றும் கசங்காமல்
விழித்திருந்தே உனைக்
காத்திருப்பேன்.

மலர் தூவப்பட்ட
வானவில்லின் பாதையில்
உன் பாதங்கள் நோகாமல் நான்
நடத்திச் செல்வேன்.

நட்சத்திரங்களைக் கடந்த ஓர் இருளில்
நாம் ஆழ்வோம்.

எனக்கு மட்டுமே தெரியும் நீ
உனக்கு மட்டுமே தெரியும் நான்.

இதயத் துடிப்புகள் ஒன்று மட்டுமே
எம் வார்த்தை.

மரணம்வரை நாம் அப்படியே வாழ்வோம்.
மரணத்தின் பின்பும்தான்.

-மதுரகவி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவன்

மனிதனாய் [illegible]
மனிதனாய் நட.
நீயாவது சிறுவனே,
நீயாவது, என் மக்களின்
செய்தியை சொல்வாயா?
என் மக்களின்
நலனை [illegible]
உண்மையான பதாகையை,
நீயாவது, சிறுவனே,
தடம் புரளாமல் உயர்த்துவாயா?

கடந்த ஐந்தாண்டுகளில் எனது நல்ல மாணவனில் அவனும் ஒருவன்.சின்னவன், சிட்டைப்போல. சிட்டைப் போல என்றதும் தான் சிட்டுக் குருவியைப் பொறுத்து அவனுடன் நான் அவ்வப்போது அளவளாவியது நினைவுக்கு வருகின்றது.

சம்பாஷணையின் போது சிட்டுக் குருவியின் அநேக பண்புகளை அவன் எனக்கு எடுத்துரைத்தான்.நானோ அவனைச் சீண்டி வேடிக்கை பார்ப்பதில் ஈடுபட்டேன். வெறும் மண்ணிறம், போதாததற்கு மண்டை வேறு சாம்பல் நிறத்து வழுக்கை என்று சிரத்தையுடன் எனது வாதங்களை முன்வைத்தேன். நிராகரித்தான். தூரத்தே நின்ற மரத்தை ஒருமுறை அண்ணாந்து பார்த்துவிட்டு அப்படியெல்லாம் கூறக்கூடாது என்னும் பாணியில் "ச்சா..... நல்லது சார்" என்றான் பதிலுக்கு.

இந்தப் பதில் எனக்குப் பிடித்திருந்தது. சிட்டுக் குருவி பொறுத்து இவனது அன்பு வெறும் வெளிப்பூச்சு வண்ணங்களில் ஒட்டியிராமல் இப்படி சற்று ஆழமாய் வேர் விட்டிருப்பது எனக்கு நன்றாய்ப் பிடித்திருந்தது.

பின் சிட்டுக் குருவியை எப்படி பிடிப்பது என்பது குறித்தும் எனக்கு விவரித்தான்.

'அரிசி கொஞ்சம் விசிறி, சொளக கவுத்து,ஒரு குச்சியில கொஞ்சமா தூக்கி வச்சி,நூல இழுத்து வுட்றது.'

'கொத்துமா'

'கொத்தாது பேசாம நடுங்கும்'

பின் தன் சின்னஞ்சிறிய கைகளில் ஒன்றை விரித்து நடு விரலை நீட்டி,

'இந்தா, இந்த விரல்ல கால வச்சி எம்பி பறந்து போயிரும், சார்' என்றான்.

'அம்மா பாத்தா அடிக்க வருவாங்க. கைல இருக்க குருவிய புடுங்கி பறக்க வுட்ருவாங்க'.

'கொன்னுருவியா'

"ச்சீச்சி...... கொல்லமாட்டம் சார்! சிட்டுக்குருவியை யாரும் கொல்லுவாங்களா?"

தம்பிக்கு காட்ட சார். தம்பி பாத்தோன விட்ருவோம்'

இப்படித்தான் எங்கள் உறவு முதன் முதலாய் உருக் கொள்ளத் தொடங்கியிருந்தது. ஆண்டு ஒன்றுக்கு இவன் தந்தை இவனை சேர்க்க வந்தபோது தன் சிறு கரங்களால் இரண்டு, மூன்று வெற்றிலை இலைகளை மடித்து வைத்து, என் காலில் விழுந்து எழுந்தான். எழும்பொழுது அவனது கண்களைப் பார்த்திருந்தேன். படிக்கக் கூடியவன்.

புத்தி சாதுரியம், ஆர்வம், சுறுசுறுப்பு, நேர்மை, சற்றே விஷமம் இவை எல்லாம் அந்த சூதுவாதற்ற ஆறு வயது கண்களில் அன்றே மின் வெட்டின.

கவரப்பட்ட நான், ஏன் இப்படி இவன் மெலிந்து இருக்கின்றான் என்று எண்ணியபடியே, முசு முசு என்று கிடந்த அவன் தலைமயிர் கற்றைக்குள் விரல்களை நுழைத்து மெல்ல நெருடிய போதும் கூச்சப்படாமல் தலை குனிந்து அமைதியாக நின்றிருந்தான்.

எனது பாடசாலை குடியிருப்புக்கு நேர் முன்பாகவே இருந்த தொழிலாளரின் குடியிருப்புகளில்

**ராமையா முருகவேள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிலேயே இவன் இருப்பிடமும் அமைந்திருந்த படியால் இவனது செயல்பாடுகள் ஏறக்குறைய முழுமையாக, அந்த நாள் தொடக்கம் என் கண்களில் வழமை தவறாமல் விழக்கூடியதாய் இருந்தது.

இவனது குடும்பம் சற்றே கஷ்டமானது. மொத்தம் ஆறு பேர். இவன் மூத்தவன். பெற்றோரின் உழைப்பில் நான்கு பிள்ளைகளைப் பராமரித்தாக வேண்டும். அதிலும் சின்னஞ் சிறிசுகள் – கஷ்டந்தான். இருந்தும், நான் பார்க்கும் போதெல்லாம் சிட்டாய்த் துள்ளித் திரிந்தான். பொருட்கள் வாங்க தினமும் கடைக்கு பெரிய கூடை ஒன்றைத் தோளில் மாட்டிக் கொண்டு பெரிய மனிதன் கணக்காய் பாதையோரமாய் மெல்ல செல்வது..... மரக்கறித் தோட்டத்தில் சாண உரமிடுவது, பாத்தி பிடிப்பது, நீர் வார்ப்பது – பின் லயத்து வாண்டுகளின் கிட்டிக்கும் கோலிக்கும் தலைமை தாங்குவது – போதாததற்கு எந்நேரமும் வாய்க்குள் ஊசலாடும் பாட்டு வேறு. பின் இவனுக்கு சிட்டுக் குருவியைப் பிடித்ததில் என்ன தவறு.

பாடங்களிலும் இவன் சளைத்தவன் அல்ல. எனது சக ஆசிரியர்களுக்கெல்லாம் நன்றாய்ப் பிடித்தவன். இவனது தூய்மை, மரியாதை செலுத்தும் பண்பு, விடயங்களை சீராக செய்யும் ஆர்வம்

**[illegible] கோழிக் குஞ்சை இறுகப் பற்றிப் பிடிக்கும் கழுகின் கரங்களாய் தோட்டத்து மக்களை நோக்கி [illegible]களின் வெறிக் கரங்கள் நீண்டன**

– அனைத்துமே அனைவரையும் இவன்பால் கவர்ந்திழுத்திருக்க வேண்டும்.

நான் உணர்ந்தேன். இந்த பண்புகள் அனைத்தும் கூடி வருவது என்பது எளிதான விடயமல்ல என்பதனை. இவன் ஓர் மனிதனாக உருவாகக் கூடியவன். ரகசியமாய் செயல்பட்டேன். அம்புலிமாமா, பாரதச் சுருக்கம், ராமாயணம், பாரதி பாடல்கள் என எனது செல்வாக்கு அவனில் விரிந்தது.

நாள் செல்லச் செல்ல வெள்ளைக்காரத் துரைமார் எங்கள் தந்தையரை அழைத்து வந்த விதம் – வழிநடையில், காடுகளில் அவர்கள் வீழ்ந்திறந்து மடிந்தொழிந்த விதம், அவர்கள் பாதைகள் அமைத்த விதம், சுரங்கங்கள் தோண்டிய விதம் – மொத்தத்தில் இன்று அழகுற அமைந்து நாற்புறமும் விசிறிக் கிடக்கும் இந்தத் தேயிலை மலைகள் உருவாகி நிமிர்ந்த விதம்.

இவற்றையெல்லாம் இவனுக்கும் இவனது நண்பர்களுக்கும் நான் அவ்வப்போது எடுத்துக் கூறி வந்தபோது இந்த மண்ணுக்கே சொந்தமான அருமையான நாட்டார் பாடல்களையும் அவ்வப்போது இணைத்துத் தர நான் தவறவில்லை.

சில நாட்களிலேயே எல்லாப் பாடல்களுமே இவர்களுக்கு அத்துபடியாகி விட்டது. ரசத்துடன் பாடுவார்கள், பயல்கள். நான் கேட்டு மனதிற்குள் சுகமாக சிரிப்பேன்.' எனது செல்வங்கள் அல்லவா? எனது தேவதைகள் அல்லவா? பாடுங்களடா. வாய் விட்டுப் பாடுங்கள்.

* * *

இனி, பாருங்கள் அன்றொரு நாள் அப்படித்தான். எங்களுக்குள் நிகழும் கூத்துக்களை அறியாத என் நண்பன் ஒருவன் நான் இல்லாத சமயத்தில் இங்கு வந்து நான் வரும்வரை காலத்தை ஓட்ட இவனிடம் 'கதை' கொடுத்து பின் நான் வந்து சேர்ந்தபோது ஆச்சரியத்துடன் வினவினான்.

'யார் இவன்? – உனது உருவாக்கமோ', எனக்குப் புரிந்தது. நிறைவான சந்தோஷத்துடன் புன்னகைத்தவாறே நண்பனைப் பார்த்தேன், பதில் கூறாமல்.

'பாரதி பாடல்கள் எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறான். உனது அக்கினிக் குஞ்சோ'

"எனது அக்கினிக் குஞ்சா? தெரியவில்லை ஒரு நாள் அப்படி உருவாகக் கூடும்" என்று மொழிந்து வைத்திருந்தேன் அன்று.

* * *

இனி, இன்று இவனைப் பற்றி இப்படி நான் கேள்விப் பட்டது உண்மையா?

நினைவிருக்கிறது. கடந்த டிசம்பர் விடுமுறையின் போது தனது ஆறாம் ஆண்டு கல்வியைத் தொடர விடுகைப் பத்திரம் எழுதி கொடுத்த போது இறுதியாக அவன் என்னைப் பார்த்தது.

இவனை போலீஸில் கொண்டு சென்றிருந்தார்களா? ஏன்? எதற்காக? இவனுக்கும் இந்தத் தோட்டத்து வேலை நிறுத்தத்திற்கும் என்ன தொடர்பு? எதற்காக இவனைக் கொண்டு செல்ல வேண்டும். சிறுவன் அவன். நம்ப மாட்டீர்கள். நான் வளர்த்தவன். நான் வளர்த்தவன். எனது மாணவன். எனது அருமையான மாணவன். அவனது சிரித்த விழிகள் கொண்ட பச்சிளம் முகத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அம்முகத்தின் நினைவு சூழ, என் மனம் இறுக நாற்காலியில் இடிந்து போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து சிந்தனையில் ஆழத் தொடங்கினேன்.

* * *

என்ன செய்வது. எனது பாட சாலையில் ஆண்டு ஐந்து வரை பயிலவே வசதி.

ஆண்டு ஆறுக்காக இவர்கள் கிட்டத்தட்ட மூன்று மைல் தொலை வுக்கு அப்பால் அமைந்து கிடந்த 'உயர்' பாடசாலைக்குச் சென்றாக வேண்டும்.

'நல்லா படிக்கணும்'

...........................

'பேசு'

..........................

பேசாமல் விழுந்து வணங்கி நமஸ்கரித்து எழுந்தான், என் மாணவன்.

'ச் சீச் சி ................ இதெல்லாம் என்னாத்துக்குடா. நல்லா படி' என்று கூறியவாறு அவனைத் தொட்டு தூக்கி நிறுத்தியபோது என் நெஞ்சம் வேண்டியது எல்லாம்;

'மனிதனாய் உருவாகு. மனிதனாய் நட. நீயாவது சிறுவனே, நீயாவது, என் மக்களின் செய்தியை சொல்வாயா? என் மக்களின் நல னை உண்மையாய் கூறும், உண் மையான பதாகையை, நீயாவது, சிறுவனே, தடம் புரளாமல் உயர்த்து வாயா?,

* * *

இவன் என் பள்ளியை விட் டகன்று பிறிதொரு பள்ளிக்குச் சென்ற இதே காலக்கட்டத்தில் தான் தோட்டங்களின் தனியார் மயமாக்கலின் அதிர்ச்சி தரும் கோர விளைவுகளை நான் நேரடியாகவே பார்க்கக் கூடியதாகவும் இருந்தது.

நனைந்த கோழிக் குஞ்சை இறுகப் பற்றிப் பிடிக்கும் கழுகின் கரங்களாய் தோட்டத்து மக்களை நோக்கி கம்பனிகளின் வெறிக் கரங்கள் நீண்டன.

வேலைச் சுமை இரட்டிப் பாக்கப்பட்டது. வேலை நாட்களோ குறைக்கப்பட்டன.

மிகக் குறைந்தநாட்களில் மிகக்கூடிய லாபத்தை ஈட்ட, காய்ந்த மாடுகள் பயிரிடை சென்று விழுவது போல, கம்பெனிகள் அவசர அவசரமாய் தோட்டத்து மக்கள் மீது விழுந்து விழுந்து மேய முற்பட்டன.

தேயிலை அரைக்கும் உருளையில் வைத்துத் தோட்டத்து மக்கள் சக்கையாய் அரைக்கப் பட்டனர். என் கண் முன்னாலேயே திடகாத்திரமான உடல் கொண் டோரின் உடல்கள் எல்லாம் அதிக பட்சமான வேலைச் சுமையாலும் அதற்கேற்ற உணவின்மையாலும் சீர்குலைந்து ஒடிசலாகிக் குறுகக் கண்டேன்.

பேய்மழையில், முகத்தில் கோபத்துடன் சீறி வீசியடிக்கும் பெரிய பெரிய மழைத்துளிகளைப் பொருட்படுத்தாமல் வழமை போல் பெண்கள் அணிவகுத்து மலைகளில் ஏறினாலும் இருபது கிலோவுக்கு மேல் கொழுந்தில்லாமல் மலையில் இருந்து இறங்க வேண்டாம் என நிர்வாகம் உத்தரவு இட்டது.

ஐந்து மணிவரை அவர்கள் அடித்த காற்றிலும் மழையிலும் சளைக்காமல் போராடினாலும் பதினைந்தைக்கூட அவர்களால் தாண்டுவது சிரமமாயிருந்தது. மழை ஒரு புறம், சுழற்றி அடிக்கும் வாடைக் காற்றில் கொழுந்துத் தளிர்கள் வெடித்து அரும்பாதது மறுபுறம். மாலை ஆறு மணி வரை உழைத்து 'அரை பெயருடன்' பெண்கள் மலைகளில் இருந்து மெல்ல மெல்ல வரிசை வரிசையாய் கூடைச்சுமைகளுடன் இறங்கினர்.

அவர்களின் முகங்கள் வாடி இறுகி கிடந்தன. காற்றோ பன்மடங்கு ஆவேசத்துடன் அவர்களின் களைத்த முகங்களில் வீசி வீசி அடித்தது.

* * *

தோட்ட நிகழ்வுகள் இப்படியாய் முனைப்புற இவனது அப்பாவை தோட்டங்களில் புதிதாக போடப்பட்ட கிழங்குத் தோட்டத் திற்கு இரவு காவலனாக நிய மித்தனர். அவனுக்கு ஒரு தடியும் கவ்வாத்து கத்தியுமே பாதுகாப் புக்காக வழங்கப்பட்டதாய் கூறி னார்கள். கூடவே ஒரு டோர்ச் லைட்டையும் தந்தார்களாம். இவை தான் அவனது ஜீவன் காக்கும் கருவிகள்.

கிழங்குத் தோட்டமோ லயங்க ளில் இருந்து வெகு தூரத்தில், ஓர் பள்ளத்தில் அமைந்து, ஒரு ஏக்கர் அளவில் பரந்து கிடந்தது. அதன் நடுவில், அனாதரவான அவனது சின்னஞ்சிறு குடிசையும் அவனும். இரவு பத்து மணியானால் போதும் - காட்டுப் பன்றிகள் இவனது தோழமைக்கு வந்துவிடும். ஒரு பன்றி, அது எவ்வளவு பெரிதா னாலும் தனித்து வந்தால் சமாளித்து விடும் திடகாத்திரம் இவனிடம் இருந்ததுதான். ஆனால் கூட்டமாக வருமாயின் இவனின் கதி வேறு விதமாக முடியக்கூடும். இதை அறிந்தே தான், பாவம், முன் கூட்டியே துரையிடம் எடுத்துக்கூறி இருந்தான் – இன்னும் ஒரு காவலா ளியை தன்னோடு நியமிக்கும்படி. தோட்டத்து நிர்வாகத்தார் அவ் வேண்டுகோளை நிராகரிக்க கணப் பொழுதேனும் சிரத்தை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இவனது தந்தை தன் சக தொழி லாளருடன் கதைப்பான். தன் விதி பொறுத்து. அவர்கள் கூறு வார்கள்;

கிருஷ்ணா, கம்பனிக்கு ஜனாதிபதி கூட நாய்க்குட்டி மாதிரி. நமக்கு லாபத்தில் பங்கு வாங்கித் தர்றேன்னு சொன்ன நம்ம தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கானே – அவன் பேச்செல்லாம் கூட அவனுக்கு நாய்க்குட்டி மாதிரி. ஒன் பேச்சையா கேக்கப் போறான். அட, விட்டுத் தள்ளு. கவனமா இரு. கெழங்கு கெடக்குது ஒரு பக்கம். நெலம மோசமாகினா மரத்துல ஏறிக்க.......

* * *

ஒரு மாதம் சென்று விட்டது. அவ்வப்போது வந்த பன்றிகளை வீராவேசத்துடன் விரட்டி அடித்தான் கிருஷ்ணன்.

இரவில் உறுமல் கேட்டவுடனேயே தயாராகி விடுவான். தகர டப்பாக்களை அடித்து ஒலி எழுப்பவும், கற்களை விட்டு வீசி எறியவும், பின் சத்தமிட்டு திட்டித் தீர்க்கவும்.........

ஆனால் இவை வெறுமனே உலா வந்த பன்றிகள். கிழங்கு வைத்தபோது வந்த பன்றிகள் வேறு விதமாய் இருந்தன. கூட்டம் கூட்டமாக திடீரென இவன் எதிர்பாராத வகையில் ஓர் நாள் அதிகாலை இரண்டு மணியளவில் தோட்டத்தைச் சுற்றி வளைத்தன. பின் 'தொரைத்தனமாக, ஆறுதலாக தின்று தீர்க்க ஆரம்பித்தன. இவன் சத்தமிட்டான். 'க்கூ........ ஏய் ஏய்........ ஓய் ஓய்............' கத்திப் பார்த்தான்...... கற்களை வீசியெறிந்தான். அசையவில்லை. தகரங்களைத் தட்டி இவன் ஒலி எழுப்பியும், சாவதானமாய் தின்று தீர்க்கும்வரை அவை அசையவில்லை. மூன்று மணி நேரம் அவை அவனை அலைக்கழித்தன. சிறு சிறு குன்றுகளைப் போல் இருட்டில் தென்பட்ட அவற்றின் அருகே செல்வதும், தடியால் அல்லது கத்தியால் அவற்றைத் தாக்குவதும் சாத்தியமானதல்லவே..... பெருமூச்சைத் தவிர வேறெதுவும் அவனில் எழவில்லை.

விடிந்த போது பிரட்டி விசிறியடிக்கப்பட்டிருந்த தோட்டத்தைப் போலவே அவன் மனமும் சின்னா பின்னப்பட்டுக் கிடந்தது.

நிர்வாகம் அவனுக்கு முறைப்படி அறிவித்தது. கடமை தவறி தூங்கிய தால் ரூபாய் நான்காயிரத்து ஐநூறு நட்டம் ஏற்படுத்தியதாகவும் கட்டத் தவறும் பட்சத்தில் வேலையிலிருந்து நீக்கப்படுவதாகவும்........

* * *

இவை அனைத்தும் நடந்தது எனது டிசம்பர் பாடசாலை விடுமுறை காலப் பகுதியில். பாடசாலை விடுமுறை முடிந்து நான், எனது பாடசாலை குடியிருப்புக்கு வந்து சேர்ந்த போது அவனது நண்பர்கள் ஊடாகத்தான் இவற்றையெல்லாம் நான் அறிய நேரிட்டது.

அப்பனுக்கு வேலையில்லை. மகன் கடைச் சிப்பந்தியாக தொலைவில் இருந்த பூண்டுலோயா நகருக்கு அனுப்பப்பட்டு விட்டான். என் மனத் துவண்டு விட்டது. கடைச் சிப்பந்தியாக? வெறும் கடைச் சிப்பந்தியாக? கடைச் சிப்பந்தியாகும் இளம் சிறுவர்களின் நிலைமையை நான் அறிந்தே இருந்தேன். குசினியறைப் புகைக்குள், தட்டுக்களைக் கழுவவும், கூட்டவும், மேசை துடைக்கவும்..... பின்னர்அவர்களின் செழித்த நாட்கள் காய்ந்து வரண்டு முடிந்த கட்டத்தில், அவர்களும் ஒதுக்கிக் கூட்டி எத்தித் தள்ளப் படுவார்கள் வெளியே. – கை துடைக்கப்பட்ட கடதாசிகளைப் போன்று.

என் மனம் இறுகியது. என் இளைய நண்பனே! என் இளைய நண்பனே! இதற்காகவா உனக்குப் பாரதி பாடல்களைக் கற்றுத் தந்தேன்?

* * *

அவன் என் பார்வையில் இருந்து முற்றாக அகன்று மூன்று நான்கு மாதம் முடிந்திருந்தது. அதற்குள் இந்த தோட்டத்தில் என்ன என்னவோ நிகழ்ந்து, ஏதேதோவெல்லாம் உருவாகத் தொடங்கியிருந்தது. கம்பெனிகளின் அட்டகாசம் கட்டுக் கடங்காமல் போயிருந்தது. வழமை போல் தொழிற் சங்கங்களினால் தீர்க்க முடியாததை தொழிலாளர்கள், தம்து தொழிற் சங்க பேதங்களை எல்லாம் மறந்து தாமே தீர்க்க முன்வரும் சூழல் உருவாகி சூடு பிடிக்கத் தொடங்கியிருந்தது. மாத இறுதி என்றபடியால் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டபின் நடவடிக்கையில் இறங்கத் தருணம் நிச்சயித்தார்கள் தொழிலாளர்கள்.

நிர்ணயிக்கப்பட்ட தினம் – பளீரென்று விடிந்திருந்தாலும் வழமைக்கு மாறான தொழிற்சாலையின் சத்தமற்ற அமைதி ஓர் இறுக்கத்தை, ஓர் விநோதமான நிசப்தத்தைத் தோட்டத்தினுள் ஏற்படுத்தியிருந்தது. தொழிலாளரது முகங்களில், ஓர் விடயத்தை செய்து முடிக்க எழுந்த தீர்க்கத்தின் பிரதிபலிப்பு தெரிந்தது.

காலை பத்துமணியிருக்கும். பறிக்கப்பட்ட கொழுந்து தொழிற்சாலைக்கு முன்பாக வெறும் வெளியில் கொட்டப்பட்டு குவியல் குவியலாய் சூரிய ஒளியில் தக தக என்று மின்னிக் கொண்டிருந்தது. பெண்கள் வரிசைக் கிரமமாக வந்து தமது கூடையை கவிழ்த்து தம்பாட்டிற் கொட்டிச் சென்றார்கள்.

உழைப்புக்குத் தகுந்த மரியாதை செலுத்தத் தெரிந்த, தேயிலைக்கும் சாமி வைத்து வணங்கும், வணங்கத் தக்க மக்கள் இவர்கள் என்பதை நான் அறிவேன். சம்பாஷணையின் போது கூட, 'அந்த மலை பொன் கொழிக்கும் மலை' என்று தேயிலை அதிகமாக விளையும் மலைகளை அன்போடு விழிக்கும் மக்கள் இவர்கள்.

மேடுகளைக் கடந்து, பள்ளங்களைக் கடந்து, அடிக்கக் கூடிய பேய் மழையைக் கடந்து, ஒவ்வொரு தளிராக ஆயும் அந்த முரடு தட்டிப்போன விரல்களுக்கும் கரங்களுக்கும் மாத்திரம்தான் தெரியும் அவற்றின் அர்த்தம் என்பதையும் அறிவேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோ கொழுந்தை விசிறி யடித்துக் கொட்டினார்கள்.

கொட்டும் பொழுது வெப்பம் மிகுந்த வார்த்தைகளையும் சேர்த்தே அவர்கள் கொட்டத் தவறவில்லை.

'இந்தா, அந்த தொர நாயிய வந்து அரைச்சு எடுத்துக்கச் சொல்லு'

'கம்பெனியாம் மயிராம்........ இது ஒன்னுத்தான் ஒனக்குத் தூளு......... கொண்டு போயி பொட்டியில வச்சு அடைச்சுக்க சொல்லு............'

மனித உழைப்புடன் தனது சம்பந்தத்தை அறுத்துக் கொண்ட தொழிற்சாலையோ சப்தமே அற்று உம்மென்று நின்றிருந்தது.

அதற்கு முன்னால்,அதற்கு நேரெதிரே இரண்டாள் உயரத்திற்கு குவிக்கப்பட்ட கொழுந்துக் குவியல்கள் சவால் விடுப்பது போல் அமைதியாகச் சிரித்துக் கொண்டு இருந்தன.

* * *

இருப்பினும் தொழிலாளர்கள் நினைத்தது போல் வேலை நிறுத்தம் இரண்டொரு நாளில் முடிந்ததாய் தெரியவில்லை.

கம்பெனிக்குப் புரிந்தது – இங்கு விட்டுக் கொடுத்தால் எல்லாத் தோட்டங்களிலும் விட்டுக் கொடுக்க வேண்டிய சூழல் உருவாகும் என்று. கம்பனிகளிடம் இருந்து 'பங்கு' பெற்றுத் தருவதாகக் கூறிய தொழிற் சங்கத்தின் பிரதிநிதி 'பேச்சு வார்த்தைக்காக' தோட்டத்தில் நுழைந்ததுமே தொழிலாளர்கள் பதறித் துடித்தனர். பதற்றம் கட்டுக்கடங்காமல் போன கணத்தில்;

'நாயி........ எங்கடா வந்த நாயி....... கம்பனி ஏடுத்தா என்னமோ வாழும்னியே..... எங்கடா வாழ்ந்தோம்........

–ச்சீ............ அப்படி பேசாத ராமையா....... இவரா கம்பனிக்கு கொடுத்தாரு!

'நீ சும்மா இரு........ நீ சும்மா இரு........ இவனுங்க தலைவர் தானே சொன்னான் பங்கு தர்றதா? லாபம் தர்றதா.......'

'ஏய்.......ஏய்...... அடிக்காத. நீ இங்கிட்டு வா....... இங்கிட்டு வா....... சொல்றேன்........'

'வுடு....... நீ....... கைய வுடு'

'நீ மொதல்ல வுடு...........'

தொழிலாளர்களே பிரதிநிதியை தொழிலாளர்களிடமிருந்து மீட்டனர். வழி அனுப்பி வைத்தனர். தவித்துப் போன பிரதிநிதி தட்டுத் தடுமாறி, தான் வந்த காருக்குள் சமாளித்து ஏறினார். அவர் எதிர் பார்த்திருக்க முடியாது தான் வெப்பம் இந்தளவு சூல் கொண்டிருக்கும் என்பதை.

ஆனால் அன்று இரவே சூல் கொண்ட வெப்பம் பரவி, விரவி குரங்குமலை டிவிசனிலிருந்து ஓர் இளைஞர் பட்டாளமாக துரை பங்களாவை நோக்கி இரவில் இறங்கியது. இரவு பத்து மணியளவில் துரையில் பங்களாவுக்குள் நுழைந்த இளைஞர் அணி அங்கு இருந்த அனைத்தையுமே துவம்சம் செய்தது. துரை இருக்கவில்லை. காவலாளியோ திசை தெரியாமல் பறந்துவிட்டான்.

பூச்சட்டிகள் நொறுக்கப் பட்டன. கண்ணாடிச் சாளரங்கள் சுக்கு நூறாக்கப்பட்டன. கதவுகள், திரைச் சேலைகள், மேசைகள், நாற்காலிகள், அனைத்தும் நொடிப் பொழுதில் தவிடு பொடி. துரை இல்லாதது கூட ஏதோ தொலை பேசி சச்சரவினால் என்று கூறப் பட்டது. துரை இருந்திருந்தால் என்ன நடந்திருக்குமோ ஏது நடந்திருக்குமோ என்று சில வயதானவர்கள் பேசிக் கொண்டனர். எனக்கோ இதுவெல்லாம் புதிதாக இருந்தது. இப்படிப் பட்ட வெப்பம் கொண்ட சூழலை நான் தரிசித்ததே இல்லை.

**தலைவர்கள் கூடி, கதைத்து, தீர்மானித்து பத்துப்பேரை தந்தனர்.....**

தனது உழைப்பின் அநியாயமான திருட்டுக்கு எதிராக எழுந்துள்ள இம்மக்கள் அணியின் இந்த சூறைக்காற்று சுபாவம் இக்கணத்தில் அனைத்தையும் அறைந்து நொறுக்கி சுக்கு நூறாய் ஆக்கும் அசுர வலு கொண்டதாய் உருவாகலாம் என்பதனை அன்றுதான் முதன் முதலாய் நான் நேரடியாக காணக்கூடியதாக இருந்தது.

மறுநாள் காலை பத்து மணி இருக்கும். போலீஸ் ஜீப்புகள் தோட்டத்திற்குள் வரிசையாக நுழைந்தன.

'யார் அடித்தது...... யார் அடித்தது......... யார் பார்த்தது– ........ யார் பார்த்தது? – விசாரணை– தெரியாது! ......

போலிசிற்கு நிலைமை புரிந்தது. வெப்பத்தின் தன்மையும் புரிந்தது. பேசாமல் தலைவர்களை அழைத்தனர். பயமுறுத்தினர். கெஞ்சினர். தோட்டத்தையே கைது செய்வோம். இது தேவைய்யா? இது தேவையா? பத்துப் பேரை தாங்க போதும். நாங்களும் போயிருவோம்.

தலைவர்கள் கூடி, கதைத்து, தீர்மானித்து பத்துப்பேரை தந்தனர்.....

பயப்பட வேண்டாம். ஸ்டேசனுக்கு நாங்க வருவோம். மக்கள் வழியனுப்பி வைத்தனர் இளைஞர்களை.

போலீஸ் ஜீப்புக்கள் இளைஞர்களுடன் புறப்பட, வான்களை, பஸ்களை பிடிக்க பிரதான பாதையை நோக்கி வயதில் மூத்தவர்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துத் தலைவர்களும், இளைஞர்களும், சில பெண்களும் தோட்டத்திலிருந்து செங்குத்தாய் கீழிறங்கிய நெருகலான குறுக்குப் பாதைகளில் தேயிலையைப் பிரித்து பிய்த்து நைத்துக் கொண்டு ஆளை முந்தி முந்தி விரைந்தனர்.

கிழமைகள் சென்று விட்டிருந்தன. மறுக்கப்பபட்ட சில உரிமைகள் இப்போது மீண்டும் தளர்த்தப் பட்டு தோட்டம் ஓரள்வு அமைதி பூண்டிருந்தது. ஆனால் இதற்குப் பின்னும் போலிஸ் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. இந்த போராட்டத்தின் பின்னால் ஓர் வெளித் தொடர்பு உண்டாம். இல்லையென்றால் துரைக்கு வரும் தொலைபேசி பயமுறுத்தல்கள், அவமதிப்புகள், கேவலமான பேச்சுக்கள்? அது யார்?

* * *

இரண்டு மூன்று தினங்களின் பின் அவனை, என் மாணவனை, என் இனிய தோழனை பொலிசார் துரையின் அலுவலகத்திற்கு கொண்டு வந்து சேர்த்த செய்தியை அறிந்தேன், அவனது தந்தையோடு.

விடயங்கள் அப்போது தான் தெளிவு பட்டது. இவன், இந்த சிறுவன், தான் வேலை பார்க்கும் கடையிலிருந்து தனது மூத்த தோழன் ஒருவனின் உதவியோடு எப்படியோ தோட்டத்து தொலைபேசி இலக்கத்தை கண்டு பிடித்து துரையை அழைத்து தகாத வார்த்தைகளால் குறைந்தது நாளொன்றுக்கு இரண்டு தரம் திட்டி தீர்த்திருக்கிறான். என்ன இது? கூடினால் இவனுக்கு பதின்மூன்று வயது இருக்கும். தோற்றத்தைப் பார்த்தால் அதைவிட குறைவு. ஒன்பது என மதிப்பிடலாம். நம்ப முடியாமலும் இருக்கிறது. அனால் நம்பாமலும் இருக்க முடியவில்லை. இவன் செய்யக் கூடியவன்தான்.

கதையை விரிவாக விசாரித்தப்போது இவன் செய்திருக்கலாம் என்பது தெளிவாகியது. கடையில் இவன் போதிய சுதந்திரத்துடன் இருந்திருக்கிறான். வரும் தொலைபேசி அழைப்புக்கெல்லாம் இவன்தான் அடிக்கடி பதிலுரைக்கப் பணிக்கப்பட்டிருக்கிறான். மேலும் இரவில் இவனது முதலாளி கடையில் தங்காதது வேறு இவனுக்கு வசதியாகிவிட்டது.

இரவு பன்னிரெண்டு மணிக்கெல்லாம் இவ்னது திட்டுதல் நாளும் ஆரம்பமாகி இருக்கிறது. துரையை அசத்தியிருக்கிறான்.

'தொரையா கதைக்கிறது' ...... தொரையா கதைக்கிறது? அடேய் தொர அடேய் தொர........ அடேய்......'

பொலிசார் அதிக சிரமப் பட்டுத்தான் அந்த கடையை முற்றுகை இட்டுள்ளனர். இவற்றையும் அலுவலகத்தில் நடந்த விபரங்களையும் தோட்டத்து தலைவர் என்னிடம் நுணுக்கமாய் விபரித்த போது நான் பேசாமல் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தேன்.

மிகச்சிறியவனாம். தயங்கவில்லையாம். தான் செய்ததாக ஏற்றுக் கொண்டானாம் சிறுவன். மன்னிப்பு கேட்க சொன்னார்களாம், அவனை, துரையிடம். அவனுக்கு மன்னிப்பு கேட்கக் கூடத் தெரிய வில்லையாம். அதற்குள் அவனது தந்தை அவன் சார்பாக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்று கூறி விட்டாராம். அதனால் விட்டுவிட்டார்களாம். பையன் அமைதியுடன் அப்பாவுடன் சென்று விட்டானாம். அமைதியான பையனாம். வீட்டில் இருக்கிறானாம். படிக்கக் கூடிய வனாம்.

என் உள்ளம் மீண்டும் வேதனையுள் அமிழ்ந்தது. அவனது பெரிய பச்சிளம் விழிகளும் பரந்த நெற்றியும் என் மனக்கண்ணில் எழுந்தன. பெயர் தெரியாமல் வீழ்ந்திருக்கும் கானகத்து மலர்களைப் போல முகை வெடித்து மலைகளுக்குள்ளேயே புதையுண்ட மலர்கள் இங்கே அனந்தம். இம்மலர்களை அவற்றின் வேருக்கு அணி சூட்டும் வகையில் சமர்பிக்கீ என்று ஓர் பாடல் இங்கு எழும் என்று என் இதயம் வினா தொடுத்தது. ஒளி படைத்த கண்ணினை உடைய இவன்.......

சிறுவனே வேலையிழந்த உன் தந்தை குறித்து யோசித்தாயோ? உன் சின்னஞ்சிறு தம்பி தங்கைகள் குறித்து யோசித்தாயோ? இல்லையெனில் இழந்து போன உன் பாரதி பாடல்கள் கொண்ட நாட்களை நினைத்து யோசித்தாயோ? பெருமூச்செறிந்தேன். எவ்வளவு நாள் அவனைச் சந்தித்து..........

இன்று மாலை அவனைச் சந்திப்பேன் அவனைத்தான்-என் சிறுவனை. அவனுக்காக பிஸ்கட் வாங்கி வைக்க வேண்டும். வேறு என்ன வாங்கலாம்? எனக்கு இப்போது நினைவுக்கு வந்தது ஓர் வரி...... 'மஞ்சள் மைனா தன் தோழர்களைத் தேடுகின்றது என்னும் ஒரு வரி.

வானத்தை என் கண்கள் அண்ணாந்து நோட்டமிட்டன ●

**கார்க்கி இலக்கியம்.**

வாழ்க்கை சரியான
பாதையில்தான்
போகின்றது. உங்களை
கூட திறந்த மனதோடு
இங்கு கொண்டு வந்து
சேர்க்கவில்லையா?
வாழ்நாள் முழுவதும்
உழைத்துக் கொண்டிருக்கும்
நம் போன்றவர்களை அது
கொஞ்சம் கொஞ்சமாக
ஒன்று சேர்க்கிறது.

\- தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டேலா



# வாழ்த்துக்களுடன் ஓர் விசாரிப்பு.

– – விக்டர் ஜேம்ஸ் –

இந்த
நூற்றாண்டின்
ஆரம்பத்தில்
காளியை நிகர்த்த
ஓர் ருஷ்யகாரன்
நம்பிக்கைத் தந்தான்.
பின் இடை நடுவே
சீன மதில் சுவராய்
ஓர் விடி வெள்ளி.
இனி,
இந்த நூற்றாண்டின்
இறுதி வெடிப்பில்
நீ.
உரத்து பேசு.....

காளியை நிகர்த்தே
நீ நிற்கா விடினும்
சீன மதிற் சுவரின்
திண்மையை நீ
ஒக்கா விடினும்
ஓர் நாநூறுவருடங்களின்
பின்
சிரித்தாயே
அதற்காகவேனும்
நீ
உரத்து பேசு!
ஆம்
நண்பனே,
உன் குழந்தைகள்
வெண் பனி
தூவலில் நனைந்து
பின்
தாமும் வெள்ளையனாய்
ஆகி விட்டதாய்
நினைத்து சிரித்தபோது
நீ அழுதாயே
அதற்காகவேனும்......
இன்று,
அவர்கள் உண்மையாய்
சிரித்தபோது
நீயும் இணைந்தாயே
அதற்காகவேனும்........
கருப்பில் இத்தனை சுகமா
என்று
ஓர் நாநூறு வருடமாய்
ஒளித்து வைத்திருந்த
சிரிப்பை, இப்போது
அவிழ்த்து விட்டாயே
அதற்காகவேனும்
உரத்துப் பேசு.
நான்
கேட்கத் தயார்.

அறிவேன்,
உன் தம்பியை
குழிதோண்டி
தலைதெரிய
புதைத்த கதையை.
உனது எண்ணற்ற
சகோதரிகளை
கற்பழித்து
பின்
எதிர்த்தோரின்
தலைகளை
பெற்றோலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானஸ்நானம்
செய்து
தீக்குச்சிக்கு
இரை தந்த கதையை.

பின் உனது
இந்தச் சிரிப்பு
ஓர் நாநூறு
வருடத்திற்கு
ஒளிந்ததிற்கென்ன?

அறிவேன்.
உங்கள் மண்ணில்
நதிகள்
ஓர் நாநூறு ஆண்டுகளாய்
ஓடவில்லை-உங்கள்
ரத்தம்தான் ஓடியது
என்ற இத்தனை கதையையும்.

பின்
நின்சிரிப்பு ...........!
உரத்துப் பேசு.....

நீ
கூறுவாய்,
மறக்க முடியாது
உங்களின்
பொன்னையும்
மண்ணையும்
பறித்துக் கொண்டு
பட்டினியால் உம்மை
மடித்து - உலகின்
தாழ்மட்ட கூலியாய்
நாடு கடத்தி-வெறும்
பதக்கம் பெற்றுத்தரும்
இயந்திரமாய்
உங்களை மாற்றிய
கதையை..........
நீ கூறுவாய்,
உணர்வற்ற தொலைபேசிகள்
கூட
உங்களின் நிறம்
விசாரித்த கதையை.....
நீ கூறுவாய்,
உங்களின் வாழ்நிலை
பேச்சுவார்த்தைகளில்
மண்டபம் நிறைய
உங்களை மாத்திரம்
வெளியில் நிறுத்தி வைத்திருந்த
கதையை....
பின்,

நீ இல்லாமலேயே
உங்களின் வாழ்நிலை
எங்கிருந்தோ வந்தவனால்
தீர்மானிக்கப்பட்ட
கதை அனைத்தையும்
நாம் அறிவோம் நண்பா.

நீ
கூறுவாய்,
அடிமைகள்
வாழ்விற்கு
உங்களைத்தான்
உலகம் முழுதும்
உதாரணம் காட்டியது
எனும் கதையை.

நீ கூறுவாய்-உனது
தங்கச் சுரங்கங்களிடம்,
காட்டிடை மிருகங்களிடம்,
செம்மறி ஆடுகளிடம்,
புல் வெளிகளிடம்,
உங்கள் வாழ்வியல்
கொடுமைகளை
இன்னும் கேட்டு
தெளியச் சொல்லி... தெளியச் சொல்லி
நல்லது நண்பனே,
உரத்துப் பேசு
நாம் கேட்கத்
தயார்.

இன்று
சுதந்திரக்
காற்றை நீ
சுவாசிக்கிறாய்.....
மண்ணை முத்தமிடுகிறாய்......
இருப்பதாய் கூறப்படும்
ஜனநாயகத்தில்
கைகோர்த்து
நிற்பதாய் கூறுகின்றாய்.......
அறிவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்,
என் இனிய
நண்பனே
ஒன்றை நான் நினைவு
படுத்தியாக வேண்டும்
உனக்கு.

வாழ்!
வாழ்க்கை மீது முடிவுறா
காதலோடு, வெறியோடு
வாழ்.
ஆனால் வர்க்கத்தின்
சாயத்தை
அவ்வப்போதேனும்
நீ பூசியதை
மறந்து விடாதே.
உச்சத்தை இன்னும்
நீ அடையவில்லை.
எச்சத்தில் தான் இன்னும் நீ
நிற்கின்றாய்-மறந்து போகாதே.

தம் சிந்தனையை
ஓர் நாநூறு
வருடத்திற்கு அப்பாலும்
விரித்து
தம் வர்க்க
பிரஞ்ஞையுடன்
உயிர் துறந்த தோழர்
உன்னில் அனேகர்
நண்பனே-அறிவேன்
அக்கதையினையும்.

பேசு.
உரத்துப் பேசு.
ஆனால்
ஓர் நாநூறு
வருட
போராட்ட வரலாற்றை
ஓர்
நாலு வருடத்திற்காய்
நசித்துப் போட்டு விடாதே.

போயர்களின் - மீது
பார்வையை
தீட்சமாக
வைத்திரு.

ரஷ்யாவின் சிதைவையும்,
சீனாவின் பொருளாதார
பிறழ்வையும்
உள் வாங்கு.
இருபத்தியோராம்
நூற்றாண்டு
உன் வெற்றிக் களிப்பில்
மலரட்டும்.
இன்னும்
நீளட்டும்.
ஆனால்,
ஆனால்,
மரித்த
நின் தோழர்களின்
நினைவுகளோடு........

நினைவில் உள்ளதா?

வாழ்த்துக்கள்
என்
நண்பனே........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விமரிசனம்

# ஜெயமோகன்: திசையழிந்த அத்துவான வெளியில்

- கே. எஸ். நரேந்திரன்.

நூல்: திசைகளின் நடுவே.
ஆசிரியர்: ஜெயமோகன்.
வெளியீடு: அன்னம்(பி)லிட்,
2, சிவன்கோயில் ...
சிவகங்கை 623560
டிசெம்பர், 1992

"ஜெயமோகனின் சிறுகதைகளைப் படிக்காத ஒருவர் சிறுகதை பற்றியே பேசக்கூடாது" என்ற கண்டிப்பான சட்டப்பிரகடனம் ஒன்றை எப்போதோ "தினகரன்" வாரமலரொன்றில் படித்தபோது அதிர்ந்ததுண்டு. அந்தக் கட்டுரையைப் படிப்பதற்கு முன் சஞ்சிகைகள் சிவற்றில் அவ்வப்போது ஜெயமோகனின் கதைகளைப் படித்திருந்த அனுப்வத்தை மீட்டிப் பார்த்த போது, அண்மித்த வருடங்களில் சிறுகதையுலகில் அறியப்பட்ட பிரபஞ்சன், சி.ஆர். ரவீந்திரன், மேலாண்மை பொன்னுசாமி, இரா. முருகன், தனுஷ்கோடி போன்ற ஆற்றல்மிக்க இலக்கிய கர்த்தாக்கள் வரிசையில் ஒருவராக ஜெயமோக னையும் கருதமுடிந்தது; மேற்படி சட்டம் போடு கின்ற அளவுக்கு பிரமிப்பு எதையும் இனங்காண முடியவில்லை.

பேராசிரியர் சிவத்தம்பி 'சிறுகதைக்கு ஓரளவுக்கு நம்பிக்கை ஒளியூட்டுவது ஜெயமோகன்' என்று ஒரு தடவை குறிப்பிட்டதைப் படித்தபோது வினோதார்த்த மாயிருந்தது. அவ்வாறு கூறுவ தற்குக் காரணமாகக் காட்டிய கதை 'நாகம்'. அந்தச் சிறுகதை அப்படி யொன்றும் குறிப்பிடத் தக்க படைப்பாயிருக்கவில்லை யென்ற வகையில் பேராசிரியரின் அத்தாட்சிப்பத்திரம் குறித்து வியப்படையாமல் இருக்கமுடியவிலல்லை.

வைரக்கல் எதையும் பெற்றுப்பட்டை தீட்ட வாய்ப்பற்ற ஒருவர் வெறும் கண்ணாடித் துண்டைப் போலியாக வைரக்கல்லாய்க் காட்ட எத்தனித்தது போன்ற தோற்றத்தையே 'நாகம்' சிறுகதையில் காணமுடிந்தது. அந்தக்கதையின் கரு வெறும் அரைத்த மா – கணவனை இழந்த ஒரு அப்லையிடம் வந்து போகிற . ஆணாதிக்க பிம்பம் நாகமாக்கப் பட்டுள்ளது. கதை முழுமையும் படிமத்தின் மேல் படிமமாக அடுக்கப்பட்டி ருந்தது(உரலில் பலதரம் கிடந்து மாவாகப் போனதை இன்னொருதரம் கிறைன்டரில் போட்டி ருக்கிறார்). இப்படி நவீனமாய்ப் படிமங்களைக் குவித்துவிடுவதால் மட்டும் ஒரு சிறுகதை உன்னத கலைப் படைப்பாகிவிடுமா? சிறுகதை ஒன்றுக்கு அவசியமான ஏனைய அங்கங்களை யெல்லாம் ஓரங்கட்டிவிட்டுத் தனியொரு உறுப் புக்கு வெறும் பூச்சுவேலை மட்டும் பண்ணி விட்டால் உயிர்த்துடிப்போ மகத்துவமோ வந்து விடுமா?

ஜெயமோகனின் 'திசைகளின் நடுவே' என்ற முதலாவது சிறுகதைத தொகுதியைப் படித்த போதும் அவரது அனுபவச் செழுமை பற்றியோ கலைத்துவ வெற்றி குறித்தோ வேறுபட்ட முடிவதற்கும் வரக்கூடிய தாயிருக்கவில்லை. ஆயினும் நுனிப்புல் மேயும் அபிப்பிராய வியாபார அரைவேக்காட்டாளர்கள் போலல்லாமல் ஒரு நல்ல கலைஞராக மிளிரக்கூடிய ஆற்றல் ஜெயமோகனிடம் இருந்திருக்கிறது என்ற எண்ணம் அவரது 'முன்குறிப்பைப்' படித்தபோது ஏற்படாமலில்லை.

அந்த முன் குறிப்பில் "இலக்கியத்தின் மையமாகப் புதுமைப்பித்தனைப் போன்ற படைப்பாளிகளையே காண்கிறேன். புதுமைப்பித்தன் தொடாத சில ஆபூர்வ இடங்களைச் சில சமயம் (மட்டும்) தொடுகிறார் என்பதே மௌனியின் ஒரே அர்த்தம். எனவே மௌனிரக எழுத்து குறைவாகவே வரமுடியும் என்றவர் "அகவுலகும் புறவுலகும் சந்திக்கும் விகிதாச்சாரமே பெரிய படைப்புகளைத் தீர்மானிக்கிறது என்று நம்புகிறேன்."

கற்பனை வானில் உயரே பறக்க
நிஜமெனும் நூலை அறுத்திடும் பட்டம்.
– மனம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என எழுதியுள்ளதைப் படித்தபோது அவர் இவ்வளவு தூரம் பேசப்படுவதற்கு அவரது இந்த நோக்குக் காரணமாய் இருக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. இதுவும் நீர்க்குமிழியென விரைவில் சிதறியது.

அவரது முன்குறிப்பைக் கடந்து உள்ளே சிறுகதைகளுக்குள் பிரவேசிக்கும் போது மக்களுக்கான புற உலகொன்றை அவர் குறிப்பிட்டிருக்கவில்லை என்பது தெரியவரும். மக்களைப் பிரிந்த மனப்பிறழ்வடைந்தோரின் புற-அக உலகுகளை எந்த விகிதாசாரத்தில் இணைத்த போதிலும் வாழ்க்கைப் போராட்டத்தின் சவால்கள் நிறைந்த யதார்த்தப் புற உலகு காட்டப்படாமலே போய்விடும் என்பதையே காண்போம்.

இதற்கு தொகுதியின் பெயரைக் கொண்ட 'திசைகளின் நடுவே' என்ற சிறுகதை சிறந்தவோர் எடுத்துக்காட்டு. அது, பலநூறு ஆண்டுகளின் முன் உலோகாயதவாதியான சார்வாகன் பிராமணியத்தால் அக்கினிக்கு ஆகுதியாக்கப்பட்டதை ஓலைச் சுவடிகளுள் மூழ்கிக்கிடக்கும் தீஷணா என்ற பாத்திரம் நினைவு மயங்கிய நிலையில் உணரும் கதை. தன்னையும் அந்தத் தருமனின் பிச்சை ஏற்கச் செல்லும் சார்வாகனோடு கூடவே செல்பவனாயும், சார்வாகனோடு ஒத்த தன்மையை இனங்காண்பவனாயும் உணர்கிறான் தீஷணா.

முன்னதாக அவனுடைய அம்மா கெஞ்சுவாள், "தீஷணா, நான் சொல்வதைக் கேள் மகனே, இவ்வளவு படிக்கிறாயே. இந்த அன்னையின் மனம் மட்டும் உனக்குப் புரியாமல் போனதென்ன?" என்று கூறி 'அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டிவிடாதே' என்பாள். இந்தச் சுவடிகளைப் படித்த உன் அப்பா ஆனதைப் போல நீயும் என்னைவிட்டு ஓடிவிடுவாய், அதை என்னால் தாங்க முடியாது என்று உணர்த்த முயல்வாள்.

தாயை வருத்தவும் விரும்பாமல், தன்னை மாற்றவும் முடியாமல் அல்லாடும் தீஷணா சுவர் சுவராகத் தோன்றி மறையும் ரிஷி முகங்களின் அழைப்பால் குழம்புவான், தன் தந்தையின் சுவடிகள் அறையில் இருந்தபடி! அங்கேதான் 'லோகாயத ஞானம் என்ற முள்' அவனுள் குடியேறிவிட்டிருந்தது. "இப்போது இரவில் லோகாயதக் கல்வி, பகலில் வேத கோஷம். என் வேதத்தை நான் காணச் செய்யும் இந்த நெற்றிக் கண்ணைக் குத்தி உடைத்து விட்டால் என்ன? இருட்டு எனும் சுகம்; நிம்மதி"

இத்தகைய சுய பிரலாபத்தில் அமிழ்ந்து நினைவு கலங்கிப் போகும் நிலையைத் தொடர்ந்து தருமனின் விழாக் கோலமும் சார்வாகனின் எரிப்பும் நீளும் காட்சித் தொடர்களாய் விரிகின்றன. அறையினுள் – ஆடிக்கொண்டிருந்த ஊஞ்சலின் கிரீச்...... கிரீச்...... கைகளால் தலையைப் பிடிக்கிறான் தீஷணா.

"சுழல் வேகத்தின் ஒரு கணத்தில் எல்லாமே மறைந்துவிட்டன. சுழல் மையமாக நான், ஒரு புள்ளியாக நான், சகலப்பிரபஞ்சத்தையும் தூக்கிச் சுழட்டும் சக்தியின் மையப்புள்ளி. அழுத்தத்தின் அதி உச்சம். என் நெற்றிப் பொட்டை மையம் கொண்டிருக்கிறது அது. வெடித்துவிடும் இதோ இக்கணம். இதோ...... இதோ..... சட்டென்று எல்லாம் நின்றுவிட்டன. அழுத்தம் இல்லை. எதுவுமே இல்லை. திசைகளற்ற, மேல் கீழற்ற பெரு வெளி. ஒரு கணம் தான். என் பிரக்ஞை பீரிட்டெழுந்தது. உதறினேன். மவுனமானதோர் ஓலத்துடன் கண் விழித்தேன். என்சித்தம் சுழண்டு தெறிக்கப்போகிறது. நான் பைத்தியமாகப் போகிறேன்."

போய்விடவில்லை..... இன்னும் கொஞ்ச நேரம் வாசகனைப் பைத்தியமாக்கும் சுழற்சிகள், இறுதி இரு பந்திகள்.

"எழுந்தேன்; தள்ளாடி நடந்தேன். என் மனமும் உடலும் ஓய்வுக்காக மன்றாடின. என் புலன்களனைத்தும் மெல்ல அவிந்து கொண்டிருந்தன. ஆனால் உள்ளிருந்து ஏதோ உத்வேகம் அப்போதும் கசிந்து கொண்டிருந்தது. யுகங்களுக்கு முன் அந்த ரிக்வேத கவிஞன் மனமொடிந்து கூவிய குரல் எனக்குக் கேட்டது. நான் யார்? எனக்குத் தெரியவில்லை. மனத்தின் அறிய முடியாத சக்திகளினால் நான் அலைந்து திரியும்படி ஆக்கப்பட்டேன்.

"என் காலில் எதுவோ மிதிபட்டது. பாம்பு என்று உள்மனம் சொல்ல, உடம்பு எகிறியது.

எதிர்காலத்தைப் பெறுவதற்காய்
நிகழ்காலத்தை விற்றுவிட்டு
கடந்தகாலத்தை எண்ணி ஏங்கும்
பரிதாபப் பிறவி.
– மனிதன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல ஓய்ந்த பிறகு, உற்றுக் கவனித்தேன். அரையிருளில் நீளமாக, வழவழப்பாக எதுவோ கிடந்தது. சிறது நேரத்தில் என் கண்கள்பழகி, அதை அறிந்தேன். சார்வாகனின் யோகத்தண்டு!

அன்று பிராமணியத்தால் **தீயிடப்பட்ட** சார்வாகனின் உலோகாயதம்,**இன்று** பலநூறு ஆண்டுகளின் பின் புதுப்பொலிவுடன் இயங்கியல்-பொருள்முதல்வாதமாக,தத்துவந் தேடும் எவர் காலிலும் இடறும்; இது இன்றைய நிதர்சனம்.

அன்று அது கேவலம் உலோகாயதமோ வெறும் தத்துவமோ அல்ல - உலகை மாற்றும் நடைமுறைக்கான வழிகாட்டி. அந்தவகையில், பிறழ்வடைந்து உள நரம்பு நோய்க்கு ஆட்படும், நடைமுறையைப் பிரிபவர்க்குரிய தத்துவமாக அது இல்லை. அது செயலுக்கு வழிகாட்டும் உலகக்கண்ணோட்டம். வெறும் பழஞ்சுவடிக ளுக்குள் மூழ்கி முத்தெடுப்பவர் இன்னமும் வேறொரு வடிவத்தில் பிராமணியத்தின் கருத்து முதல்வாத தத்துவ வியாக்கியானங்களையே எடுப்பார். ஜெயமோகனும் அவ்வாறே எடுத்து விட்டதால், சார்வாகனோடு இனங்காணும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் செயல்திறம் மிக்க பாத்திரத்தைத் தெரிவுசெய்திருக்க வேண்டிய வேளையில் உளநரம்பு நோய்க்காட்பட்ட தீஷணாவைத் தெரிவு செய்திருக்கிறார்.

சார்வாகனை உறவாகக் காணவல்ல அகமும், அந்த அகத்துக்கேற்ற புறமும் சித்திரிக்கப்படாமையினால், உள்ளடக்கத்துக்கேற்ற உருவத்தை காணத்தவறிய கலைச் சிதைவு நேர்ந்து விடுகிறது. பொருந்தாத உறுப்புக் கோர்வைகளுடைய உருவத்தை அழகூட்ட எடுக்கப்பட்ட கலைத்துவ முயற்சிகள் அனைத்தும் புறக்குடத்தில் வார்த்தனவாகி விட்டன. உலகை மறுதலித்து, இருளுள் அமுழ்ந்தி, ஆழ்மனத் தேடல்களுள் தனித்துச்சீவிக்க விரும்பும் மௌனிரகப் படைப்பாகிவிடுகிறது ஜெயமோகனின் முயற்சி.

'நதி' என்ற முதற்கதையில் தொடங்கி 'திசைகளின் நடுவே' ஊடாக வளர்ந்து இன்றுவரை வந்துள்ள ஜெயமோகனை ஆராயும்போது, இந்த உலக வாழ்விலிருந்து விலகி விலகி ஓடும் அவர் அத்துவான வெளி நோக்கி அலைந்து கொண்டிருப்பதைத் தெளிவாகவே காணமுடியும். அனைத்தையும் படிமங்களுக்குள்ளும் தொன்மங்களுக்குள்ளும் புதைத்தே படைப்பாக்க வேண்டும் என்ற கோட்பாடுகளால் ஆட்கொள்ளப்படாத நிலையில் வெளிவந்துள்ள 'நதி', அவர் சிரமப்பட்டு உன்னத சிகரத்தை எட்ட முனைந்து எழுதிய கதைகளைவிடச் சிறப்பாக அமைந்திருந்தது. கதை முழுமையும் தாயை இழந்த மனநிலை, வெறுமையும் சோக உணர்வும் கலந்ததாக வடிக்கப்படுகிறது. தாயின் கருமகாரியங்களை ஏற்றுக் கொண்ட நதி "எதுவும் நடக்காதது போல ஓடிக் கொண்டிருந்தது மௌனமாக."இந்த இறுதி வரிகளைப் படித்தபின் கதையை மீட்டிப் பார்க்கும் போது பலவித வாழ்க்கை அனுபவங்கள் இதயத்தைக் கனக்க வைத்தது.

குறியீடு-படிமம்-தொன்மம் என்ற சாம்பார்க் குழையல் மிகுந்த ஜெயமோகன் பாணி முனைப்புப் பெற்றதாய் எழுதப்பட்ட 'மாடன் மோட்சம்' என்ற சிறுகதை, மதமோசடிகளைக் கலைத்துவத்துடன் வெளிப்படுத்துவதில் தனது குறைபாடுகளையுங் கடந்து வெற்றி பெற்றிருந்தது. கிராமத்தினுள் தலைதூக்கிய கிறிஸ்தவ ஊடுருவ லுக்கு எதிராகத் தனது இருப்பை நிலை நிறுத்தும் நோக்கத்துடன் மாடனின் அற்புத விசேடங்களைக் காட்டப் பூசாரி சித்துவிளையாட்டுகள் செய்யப் போய், இறுதியில் அற்புதம் நிகழ்த்திய மாடன் தன் நிலையினின்று அந்நியப்பட்டுப் போய் பூசாரியிடமிருந்தும் விலக்கப்பட்டுப் பிராமணியத் தால் தேவாலயத்துள் சிறையிடப்பட்ட கதை 'மாடன் மோட்சம்'. ஒடுக்கப்பட்ட மக்களின் சிறுதெய்வமாயிருந்த மாடன் பிராமணிய மயப்படுத்தப்பட்டு, சொந்த மக்களால் தீண்டப் பட முடியாத மோட்சத்தில் சுயமழியும் காட்சியின் வாயிலாக இன்றைய மத அடிப்படைவாத எழுச்சியின் கோரத்தை அந்தக் கதையில் காண முடிந்தது.

இதுபோன்ற மக்கள் நலன் சார்ந்த விடயங்களைப் படைப்பாக்க முடியாமல் 'அதியுன்னத கலைத்துவப் பிராமணியத்தால்' மோட்ச தீட்சை வழங்கப்பட்டுவிட்ட ஜெயமோகன் எழுவதற்கு முயலவும் முடியாமல் இறுகிப் போய்க்கிடப்பது அவரது சகாப்தத்தின் சோகம் போலும். தனக்கு -'மோட்சம்' உறுதிப்பட்டு விட்டதை மாடனால் புரிந்து கொள்ள முடிந்தது; மறுகணம் அதன் உடம்பு பதற ஆரம்பித்தது. வாளை ஓங்கியபடி, 'அடேய்' என்று வீரிட்டபடி, அது பாய்ந்து எழமுயன்றது. அசையவே முடியவில்லை. பாவி அய்யன் மந்திரத்தால் தன்னை யந்திர பீடத்தோடு சேர்த்துவிட்டதை மாடன் பயங்கரமான பீதியுடன் உணர்ந்தது". (திசைகளின் நடுவே. பக். 89).

கனவுகளின் கர்ப்பப்பை.
- தலையணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயமோகனோ தன்னை இறுகக்கட்டிய கலைத்துவப் பிராமணியத்தின் கொடுமை குறித்து உணராதவராய் (அந்தக் காரணத்தால் எழவேண்டு மென்ற சிந்தனையே இல்லாமல்) இருப்பதை இந்தத் தொகுதியின் 'படுகை'போன்ற சிறுகதைகளும், இன்று அவர் உதிர்க்கும் அபிப்பிராயங்களும் காட்டி நிற்கின்றன.

'படுகை' சிறுகதை, மழை பொழியும் போதெல் லாம் பொங்கிப் பாய்ந்து கிராமத்தை அழிக்கும் காட்டாற்றை அணைகட்டித் தடுத்து அதிலிருந்து மின்னையும் பெற்ற வெள்ளைத் துரையின் முயற்சி யைப் பாமர மனிதனின் நோக்கில் சித்திரிக்கிறது. காட்டுத் தெய்வமான பேச்சியின் சீற்றமும், வள்ளி ஆற்றின் கட்டற்ற ஓட்டமும், சகல அழிவுகளும் படிமங்களூடாகவே காட்டப்படுகிறது. நேராக இந்த அர்த்தத்தைப் பெறாமல் வேறு பல கற்பனை களில் வாசகன் மிதக்கமுடியும். அது ஜெயமோகன் கருதி எழுதியதாக இருக்க வேண்டியதில்லை. ஓராயிரம் படிமக்குவியலோடு ஒரு பிரதியைத் தந்ததோடு அவரது கடமை நிறைவு பெற்றுவிட்டது. இனி வாசகர்கள் சுயமாய் படைப்பாளிகளாகி, அதை உடைத்து, விரும்பியபடி பொருத்தி, தம்மனம் போன போக்கில் அர்த்தங்கள் கற்பித்துப் படிப்பதன் மூலமாக ஆசிரியர் எண்ணாத தளங்களுக்குப் பறக்க முடியும்.

இந்த நோஞ்சான் கோட்பாட்டுடன் அவர் இலங்கைப் படைப்பாளிகட்கு உபதேசம் பண்ண அண்மையில் முன்வந்துள்ளது பற்றி அறிவோம். "ஒரு தவளைக்குஞ்சும் சில வெம்பல்களும்" என்ற தலைப்பில் '**புதிய பூமி**' ஒக்டோபர் இதழில், இலண்டனி லிருந்து வெளிவரும் '**நாழிகை**'சஞ்சிகையில்(ஜூலை 1994) "இலங்கைப் படைப்புக்களின் வடிவம்" குறித்து ஜெயமோகன் எழுதிய கட்டுரை பற்றி இடம் பெற்றிருந்த கருத்துகள் கவனத்தை ஈர்ப்பன.

உள்ளடக்கத்துக்குப் பொருத்தமற்ற வடி வங்களுக்கு வேண்டாத வர்ணங்கள் சேர்த்துப் பல சந்தர்ப்பங்களிலும் தோற்றுப் போன ஜெயமோகன் எமது படைப்புகளின் வடிவம் குறித்துச் சொல்லியிருப் பதைத் தொகுத்து நோக்குவோம்.

**"இன்றைய இலங்கைத் தமிழ்ப்படைப்பு க்களைப் பொதுவாகப் பார்க்கும்போது அனுபவ உலகின் தீவிரத்தை உள்வாங்கி வெளிப்படுத்த முடியாதபடி மொழியும் வடிவமும் பின் தங்கிவிட்டிருப்பதாகத் தெரிகிறது. இவற்றில் ஒரு வெடிப்பு நிகழாதவரை இலங்கைத் தமிழ் படைப்பிலக்கியம் இன்று உள்ளது போல, பழுக்காமல் உதிர்ந்தவற்றால் நிரம்பியதாகவே இருக்கும். இதுபற்றிய தீவிரமான ஒரு விவாதம் குறைந்தபட்சம் புலம் பெயர்ந்தோர் படைப்புலகி லாவது உடனடியாக நடக்க வேண்டியது அவசியம்.**

**".......இலங்கைப் படைப்பாளிகள் தங்கள் படைப்புலகின் தேவை என்ன என்பது பற்றிய பிரக்ஞையுடன் இல்லை."**

**"......தமிழகத்தில் எதார்த்தவகை எழுத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. மிகு கற்பனை சார்ந்த புனைகதைகளின் உலகில் மிதக்கும் வாசகலட்சங்களுக்கு அவர்கள் வாழ்வை அவர்க ளுக்குக் காட்டும் கடமை அதற்கு உண்டு.**

இலங்கையில் இன்று படைப்புலகின் முதன்மை யான பணி இதுவாக இருக்க முடியாது. இலங்கை மக்கள் முதுகொடிய யார்த்ததைச் சுமப்பவர் கள். வாழ்வின் பௌதீக இயக்கத்தை சித்திரிப் பதன் மூலம் தமிழக யதார்த்தத்தை இலக்கியம் ஒளியே படாமல் இருந்த எத்தனையோ மூலைகள் மீது கவனத்தைக் கொண்டுவந்தது. இத்தகைய விரிவும் பன்முகத்தன்மையும் இலங்கை மண்ணுக்கு இல்லை. தவறான கருவியால் (யதார்த்தவாதத்தால்) இலங்கை வாழ்வையள்ள படைப்பாளிகள் முயலும்போது திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான பௌதீக வாழ்வே அகப்படுகிறது. விளைவாக பல படைப்புகள் முதல் சில பக்கங்களிலேயே அலுப்புத் தருகின்றன."

".........இலங்கைப் படைப்பாளி இன்று தன் முன் கொந்தளிக்கும் வாழ்வை சரித்திரத்தின் முன் வைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. கனவுகள், மதிப்பீடுகள், கருத்து நிலைகள் மூன்றையும்உடைத்து ஆராய வேண்டியுள்ளது. ஒரே சமயம் சிந்தனையும் உள்ளுணர்வும் தீவிரமாக செயல்பட்டாலொழிய இது சாத்திய மில்லை. கருத்து நிலைகளை விவாதிக்கும் தருக்கம் சார்ந்த மொழியும், உள் மன அதிர்வுகளை மீட்டெடுத்துப் பதிவு செய்யும் பாய்ச்சல் மொழியும் ஒரே சமயம் பயின்று வரவேண்டியுள்ளது.

இரவின் நெற்றியில் சந்தனப் பொட்டு
இரவல் அழகில் உலவும் கனவு.
– நிலவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயமான யதார்த்த வாதம் இவற்றுக்கு மிக அசௌகரியமான ஒன்று. கருத்து நிலைகளை அதில் விவாதிக்க ஆரம்பிக்கும் போது கட்டுரை உரைத் தன்மை மேலோங்கி அழகியல் ஒழுங்கு சிதைகிறது. ஆழ்மனப்பதிவுகளைத் தொட முனையும்போது திட்டவட்டமான பௌதீக யதார்த்தத்தில் அதை 'நம்பும்படியாக' பொருத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே யதார்த்தவாத மரபின் இறுக்கத்தை மீறுவது தான் அவர்களுக்கு இன்று மிகவும் வசதியாக இருக்கக்ககூடும்."

"........... இன்னொரு வகையிலும் யதார்த்தவாதம் தடையாக ஆகக்கூடும். இன்றைய இலங்கைத் தமிழ் வாழ்வின் கொந்தளிப்பான நிலை நேரடியாக படைப்பாளியைப் பாதித்து தன்சார்பான ஒரு தீவிர நிலைக்குத் தள்ளிவிடுகிறது. இந்தச் சார்பு அத்தருணத்தின் கருமத்துடன் சம்பந்தப்பட்ட அளவிலேயே நின்றுவிடச் செய்கிறது. கலைப்படைப்புக்கு வாழ்வுடன் எவ்வளவு ஒட்டுதல் தேவையோ அதே அளவு தூரமும் தேவை....... நவீன படைப்புகளில் நிகழ்தளத்தை நிராகரிப்பதன் மூலம் இந்தத் தூரத்தை சாதிக்க முடியும். யதார்த்தவாதம் இதற்குத் தடையாகும்..... நிகழ்வுகளின் அனுபவ சாரத்தை அதாவது அவற்றின் நனவிலி மனப்பதிவுகளை மட்டும் இந்தப் பின்புலத்துடன் இணைப்பது வழியாக அர்த்தவிரிவும் தீவிரமும் கொண்ட படைப்புகளை உருவாக்க முடியும்."

யதார்த்த உலகச் சவால்களுக்கு முகங் கொடுக்க வக்கற்று அத்துவான வெளிக்குள் சிதறிப்போய்விடும் தனது நனவிலி மனப்பிரதி பலிப்புகளான 'படுகை' போன்ற படிமக் குவியல்களை யாரும் இலங்கையில் தரவில்லை யென வருந்தும் ஜெயமோகன் 'இந்தியா ருடே' இலங்கைச் சிறப்பிதழில் வெளியான உமாவரதராசனின் சிறுகதை பற்றி மேற்படி 'நாழிகை' கட்டுரையில் கூறும்போது, "உமா வரதராசனின் கதை அதற்கான முயற்சி. ஆனால் இதில் உள்ள படிமங்கள் திட்டவட்டமான கலாச்சார அடையாளம் இல்லாதவை. எனவே பல்வேறு தளங்கள் நோக்கி இக்கதை விரிவு பெறவில்லை. குறிப்புணர்த்தும் பொருளை வாசகன் அடைந்த உடனே இப்படைப்பு நின்று விடுகிறது. குறிப்புக் கதைகளுக்கேயுரிய பலவீனம் இது. இதை மீறவே ஐதீகங்களையும் தொன்மங்களையும் பயன்படுத்து வது!...... மிகுந்த பிரயாசையுடன் புற உலக யதார்த்தததுடன் ஒவ்வொரு வரியையும் இணைக்க முயன்றிருப்பதைத் தவிர்த்திருக்கலாம். கதையின் மொத்தமான கனவுத்தன்மையே போதுமானது. இதன் நனவுப் பிரக்ஞை சற்று பிடி தளர்ந்திருந்தால் மொழி ஆசிரியரைத் தூக்கி அவர் எண்ணாத புதிய எல்லைகளுக்குக் கொண்டு சென்றிருக்கும்" என்கிறார்.

நனவிலி மனதைக் குடைந்து, உள் மனயாத் திரை புரிந்து, கனவுத் தளத்தில் மிதந்து, கற்பனையிலும் காணாத கலைச் சிகரத்தை எட்ட முனைகையில் தனது வாசகர்களையும் எண்ணாத புதிய எல்லைகளுக்கு எடுத்துச் சென்றுவிடச் சிறுகதை எழுதும் உமா வரதராஜனுங்கூட எமது யதார்த்தப் பாதிப்பிலிருந்து விலக முடியாதிருப்பது ஏன்? அதற்குக் காரணமான எமது பாரம்பரியத்தின் சிறப்பம்சங்கள் பற்றிய அரிச்சுவடியும் அறியாத நிலையில்தான் எமக்கு வழிகாட்டும் அதியுன்னத கலைத்துவப் பணியாற்ற வந்திருக்கிறார் ஜெயமோகன். எமது மண்ணின் வாழ்வு இலக்கியமாக்கப் பட்டபோது மக்களிடம் வழங்கும் இலக்கிய நயஞ் சார்ந்த நாட்டார் வழக்காறுகளும் உரையாடல்களும் வளமிக்க மொழியில் பட்டைதீட்டி செப்பனிடப் பட்டு இலக்கியமாக்கப்பட்ட எமது கலை மரபுச் செழுமை பற்றி அவர் அறிந்திருக்கவில்லை யென்பதால் அவரை மன்னித்து மறந்துவிடலாம். அவ்வாறு வாழாதிருந்துவிட முடியாத வகையில் எமது அடிப்படையைத் தகர்க்கும் அபாயம் உள்ள காரணத்தால் அவரது அபிப்பிராயங்கள் மீது நாம் கவனஞ் செலுத்தாதிருக்க முடியாதுள்ளது.

அனுபவ உலகின் தீவிரத்தை உள்வாங்கி வெளிப்படுத்த முடியாதபடி பின்தங்கி விட்ட எமது மொழியிலும் வடிவத்திலும் ஒரு வெடிப்பு நிகழாத வரை இலங்கைத் தமிழ் படிப்பிலக்கியம் இன்று உள்ளது போல, பழுக்காமல் உதிர்ந்த வெம்பல்களால் நிரம்பியதாகவே இருக்கும் என்று எச்சரிக்கும் ஜெயமோகன், எமது யதார்த்தத்தாக்கம்ஆழ்மனப் பதிவுகளை வெளிக்கொணரத் தடையாக உள்ள தென்றும், 'கருத்து நிலைகளை விவாதிக்கும் தருக்கம் சார்ந்த மொழியும், உள்மன அதிர்வுகளை மீட்டெடுத்துப் பதிவுசெய்யும் பாய்ச்சல் மொழியும் ஒரே சமயம் பயின்று வரவேண்டியுள்ளது' என்ற வகையில் நாம் யதார்த்தத்திலிருந்து விலகிவிட வேண்டும் என்றும் வழிகாட்ட வந்திருக்கிறார்.

'இன்றைய இலங்கைத் தமிழ் வாழ்வின் கொந்தளிப்பான நிலை நேரடியாகப் படைப்பாளியைப் பாதித்து தன்சார்பான ஒரு தீவிர நிலைக்குத் தள்ளிவிடுகிறது' எனக்கூறும் ஜெயமோகன் 'கலைப்படைப்புக்கு வாழ்வோடு எந்தளவு ஒட்டுதல் உண்டோ அந்தளவு தூரமும் இருந்தாக வேண்டும்' என்றும்,

வாழ்க்கை என்றொரு சூதாட்டத்தில்
பகிரப்பட்ட சீட்டுக் கட்டு.
- பணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நவீன படைப்புகளில் நிகழ்தளத்தை நிராகரிப்பது மூலம் இந்தத் தூரத்தைச் சாதிக்க முடியும்' என்றும் பாதை வகுத்துத் தந்து, 'நிகழ்வுகளின் அனுபவ சாரத்தை அதாவது அவற்றின் நனவிலி மனப்பதிவு களை மட்டும் இந்தப்பின்புலத்துடன் இணைப்பது வழியாக அர்த்த விரிவும் தீவிரமும் கொண்ட படைப்புகளை உருவாக்க முடியும்'என்று புதிய தளத்தையும் இனங்காட்டியிருக்கிறார்.

இனியாவது எங்களுக்குத் தெரிய வேண்டும், போர்ச்சுவாலை மிக்க யதார்த்தத் தளத்தை நாங்கள் தூரவிலக்கி விடவேண்டும்; அதை அமெரிக்க மேலாதிக்கவாதிகளிடமும் இந்திய விஸ்தரிப்பு வாதிகளிடமும் உள்ளூர் பிற்போக்குவாதி களிடமும் தாரைவார்த்துக் கொடுத்து விட்டு வெள்ளைத்துரை பேச்சியோடு சமரசம் செய்து வள்ளியை அடக்கிப் பெண்டாள வந்ததையும் தீஷணாவுக்கு வாழ்வோடு இருந்த தூரத்தை அளந்து காட்டிக் கொண்டு மிருந்தால் போதும்.

அவர் சொல்லும் கருத்துநிலை விவாதங் கூட இத்தகைய எல்லைகளுக்குள்ளே நிலைப் பட்டுப்போன ஒன்று. இதற்குள் நின்றபடி ஜெய மோகன் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதால்தான் அவரது படைப்புகள் சிகரம் எனப் போற்றப்படுகின்றன போலும். புறஉலகை வேண்டிய அளவோடு காட்டிக் கருத்துநிலை விவாதம்புரிந்து இயங்கினால்- பொருள் முதல்வாத நிலைப்பாட்டில் ஒரு படைப் பாக்கம் அமைந்துவிட்டால் அழகியல் குலைந்துவிட்ட தென்று கூக்குரல் எழுப்பிவிடுவார்கள ஜெய மோகன்களாகிய தூயகலைவாதிகள். அத்தகைய படைப்புகளும் யதார்த்தபாணியினலான சிறந்த படைப்புகளும் நிறையவே எம்மிடம் உண்டு.

யதார்த்த பாணியில் நாம் வெற்றிபெற வில்லையென்றும, ஒரே மாதிரியான பௌதீக வாழ்வே திரும்பத் திரும்ப எழுதப்பட்ட எமது படைப்புகளைப் படிக்கும்போது முதல் சில பக்கங்களிலேயே அலுப்புத்தட்டிவிடுகிறது என்றும் எம்மிடம் உள்ளவை எல்லாம் வெம்பல்கள் என்றும் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார் கலாரிஷி ஜெயமோகன்.

'ஒரே மாதிரியான பௌதீக வாழ்வை சித்திரித்த' எமது சிறுகதைகளில் எத்தனையைப் படித்துவிட்டு உள்ளதெல்லாம் வெம்பல்கள் என்று கூறியிருப்பார்? எமது உன்னதமான படைப்புகளைப் படித்தாலுங் கூட அவர் தனது அபிப்பிராயத்தை மாற்றிவிடுவாரா் என்பதற்கில்லை. அவரோ படிமங்களும் தொன்மங்க ளும் இல்லாத சிறுகதைகள் கலைப்படைப்பாக மாட்டாவெனக் கருதும் ஒரு முடக்குவாத நோயாளி.

அவரது படிமக்குவியலைக் காணும்போது எழுபதுகளுக்கு முன் (வானம்பாடிகளின் வருகைக்கு முன்) படிமத்துக்காகப் படிமத்தை அடுக்கி அழகிழந்து கிடந்த புதுக்கவிதைத் தேக்கநிலைதான் நினைவுக்கு வருகிறது. ஒவ்வொரு கதைக்கும் தொன்மங்களைத் தேடுவதும், படிமத்துக்காகப் படிமத்தை அடுக்குவதும் சிலேடைப்புலிகள் மலிந்து கிடந்த நாயக்கர்கால சிற்றிலக்கியங்களை நினைவூட்டுகின்றன.

ஆயினும் படிம-தொன்ம கையாள்கையில் சூரராய் இவர் கிடைத்து விட்டதில் தூயகலைப் பிராம ணியக்கோட்பாட்டாளர் கூட்டத்துக்கு ஏக சந்தோஷம். 'இந்தியா டுடே' ஐந்தாம் ஆண்டு நிறைவுச் சிறப்பதழ் (ஆக. 21-செப்.5.1994) 'தமிழ் நாட்டின் விடிவெள்ளி களை' இனங்காணும் எத்தனிப்பில் இலக்கியத்திற்குரிய வராய் 'எல்லைகளைக் கடந்து' நிற்கும் ஜெயமோகனைத் தெரிவு செய்திருக்கிறது. "இருபத்தொன்றாம் நூற்றாண்டு விளிம்பில் 'எனக்கு ஆதர்ச மனிதர் காந்தி ஒருவர்தான்' என்று சொல்லும் அபூர்வ இளைஞர் ஜெயமோகன்" எனக் கண்டதில் அடங்காத ஆனந்தம் அவர்கட்கு (மேற்படி இதழ் பக் 51) "எழுதும்போது, அழகியல் உணர்வே பிரதானமானது. படைப்பாளி எந்த இயக்கத்திற்கும் சித்தாந்தத்திற்கும் முற்றிலும் கட்டுப்பட்டவனாக இருக்கக்கூடாது" என்ற ஜெயமோகனின் பிரகடனத்தால் 'என்ன எழுதப்படு கிறது என்பது முக்கியமில்லை, எப்படி அழகாக எழுதப்பட்டிருக்கிறது என்பதே முக்கியம்' எனக் கருதும் கும்பல் புளகாங்கிதம் அடைந்துவிட்டது.

இருப்பினும், தனது அவதரிப்புக்கு முன் தமிழி லக்கியம் வறண்டுபோய்க் கிடந்ததாய்க் கண்டதால் "தமிழ்நாவல்கள் பற்றிய தன் அதிருப்தியை அவர் வெளியிட்டது அதிகப்பிரசங்கித்தனம் என்று அவர் எழுத்துமீது நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பவர்கள் கூடக் கருதுகிறார்கள்" என்ற வருத்தத்தை யும், தர்க்கங்களில் சிக்கி பெரிதாகச் சாதிக்கும் வேட்கையைக் கெடுக்கக்கூடா தென்பதை "மற்றதைப் புரிந்து கொண்டதைப்போல புரிந்து கொள்வார்" என்ற நம்பிக்கையையும் தெரிவித்திருக்கிறது அந்த 'இந்தியா டுடே' இதழ். அதியுன்னத கலைத்துவச் சாதனை யூடாகவே போதிய சீர்குலைவைச் செய்யக்கூடியதாயிருக்க, இத்தகைய கருத்துகளைச் சொல்லித் தனனை இனங்காட்டி வர்க்க சமூகத்தைப் பேணும் பணிக்குத் தடங்கல்களை ஏற்படுத்துவானேன்? அதே பக்கத்தில ஞானி "சில நல்ல

வெய்யில் இன்றியே வீசிய வெம்மையில்
மேகங்கள் இன்றியே உதிர்ந்த மழைத்துளி.
-கண்ணீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களை நமக்குத் தந்தவர்கள் என்ற முறையில் சிலரை இங்கு காட்டலாம். சுந்தர ராமசாமி, அசோக மித்திரன், வண்ணதாசன், பிரபஞ்சன், ஜெயமோகன், பொன்னீலன், கடைசியாகத் தமிழவன் என்ற சிலரைக் குறிப்பிடலாம்........ உலக அளவில் செயல்படும் எதிரிகள், தமக்குள்ளும் தடம் பதித்திருப்பதை, தம்மையும் சிறைப்படுத்தியிருப்பதை, தாமும் அவர்களுக்கு கருவியாகி இருப்பதை இவர்கள் இனம் கண்டு கொள்ளும் போது இவர்களின் படைப்பாற்றல் இன்னும் பலமடங்கு மேம்படும்" என்று தெரிவித்திருப்பது குறித்து 'இந்தியா டுடே' ஒன்றும் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. அதனாலேயே ஆதிக்கசக்திகளின் சிறந்த கருவியாகப் பரிணமிக்கும் ஜெயமோகனுக்கு அதே பக்கத்தில் மணிமகுடம் சூட்டி மகிழ்ந்திருக்கிறது.

இப்போது எம்முன்னுள்ள வினா இந்தத் தூய கலைத்துவச் சக்கராதிபத்தியத்திற்கு ஏற்ப எமது இலக்கிய மரபை ஆற்றுப்படுத்தி விடுவதா, அல்லது எமது மரபின் தளத்தில் காலூன்றி நின்று எத்தகைய அழகியல் அம்சங்களையும் ஒரு முழுமையின் அளவான பகுதியாகப் பயன்படுத்திக் கொள்வதா என்பதுதான், இதற்குப் பதிலைப் பெறுவதற்கு ஜெயமோகனின் பரிணமிப்பு சிறந்த படிப்பினையாகும்.

இரத்தப்பலியிலேயே ஜீவித்த மாடன், தேவாலயச் சிறையினுள் சக்கரைப் பொங்கலைக் கண்டு குமைந்து சினங்கொண்டதென்னவோ உண்மைதான். எப்படியும் பெருகிக் கொண்டிருந்த புகழ்மோகத்தில் மாடன் விரை விலேயே ஈசனாகத் தன்னையும் மாற்றிக் கொள்வதற்குத் தடையொன்றும் இல்லை. இந்த மாற்றங்களை பல மடாலயங்கள் தேவாலயங்களாகப் பரிணமித்ததில் மட்டு மன்றி ஜெயமோகனிலும் காணவே செய்கிறோம். இந்தியப் பிற்போக்குச் சிந்தனைக் கூடாரமான 'இந்தியா டுடே' போன்ற தூய கலைத்துவப் பிராமணியக் கருவறை யந்திர பீடத்தோடு மந்திரித்துக் கட்டப்பட்டதை மகிழ்வோடு ஏற்று இன்று அவர் உதிர்க்கும் அபிப்பிராயங்கள் எமக்கு எதிர்மறைப் படிப்பினையாக அமைந்ததாக வேண்டும்.

"இன்றைய கற்கோட்டை உடைந்தால் சிலவழிகள் தெரியக்கூடும்" என்று தனது 'நாழிகை' கட்டுரையை முடித்திருந்தார் ஜெயமோகன்(நாழிகை, ஜுலை 1994. பக்கங்கள் 31-32). இந்த மாரிக்கூச்சல் அவ்வாறு கற்கோட்டையை உடைத்துத் தனது கிணற்றுக்குள் வந்து அழுந்திவிட வேண்டும் எனக்கோரும் குறுகிய நோக்குடைய தென்ற படிப்பினையைப் பெறுவதற்கு அமைவான பரந்து விரிந்த திறனாய்வு இன்றைய இலக்கிய ஆர்வலர்களின் அவசர அவசிய பணியாகும்.

தமிழகத்தின் கலாசார சீரழிவின் உச்ச நிலையில் அத்துவான வெளியில் பறக்கிற படிமப் புற்று நோயாளிக்கு அத்தைகய நோய்க்கூற்றாளர்கள் நிறைந்த சாம்ராச்சியத் திற்குரிய மணிமகுடமும் சிம்மாசனமுங் கிடைக்கக்கூடும்; மாறாக, எமது இருப்பை நிலை நிறுத்தப் போராடும் எமது மக்களின் யதார்த்தத் தளத்தில் கால்பதிக்கத் தவறினாலோ எமக்கு சூனியந்தான் மிஞ்சும் ●

## ரத்தம் சுவையானது

பாலைவனத்திலும்
சுனையொன்று
ஊற்றெடுத்தது.
அது
பசுமையைத்
தரவில்லை.
செந்நீர்
ஊற்றாய்
பெருகிச்
சுட்டெரித்தது.
இது
வளைகுடா
யுத்தத்தில்
வடிந்த ரத்தத்தை
தொட்டு ஒரு
கவிதை.

யுத்தமோ யுத்தம்!
ஆகா! அற்புதம் அழகு!

நீங்கள் ரசிக்கும் உணர்வு
மரத்தவர்களாயில்லாவிட்டால்
என்னுடன் வாருங்கள்

ஒவ்வோர் மரணத்தையும்
நான் பார்க்க வேண்டும்

இந்த ஓலமோ,
சங்கீதத்தின்
ஏழு சுரங்களையும் தாண்டிய
மூல சுரம்

மனதிற்குப் போதையின் வெறியைத்
தந்து
எனது தசைகளில்
சூடான ரத்தத்தைப் பாய்ச்சும்
பேரின்பம்

அவித்த கோழிக் காலை
பற்களால் இழுத்துச் சுவைத்தபடியே
தொலைக்காட்சித் திரையை
அவாவுடன் பார்க்கிறேன்

இரத்தத் துளிகள்
திரையில் தெறித்தாலும்
துடைத்து விட்டுப் பார்க்கவேண்டும்

ம.க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு

சாணத்தால்
கிழமையில் ஒரு தரம்
மெழுகுவாள்
என் அம்மா.

நான், என் தம்பி
என் தங்கை
என் அப்பா
என் தாத்தா
பிறந்தது
கும்மாளம் இட்டது
வளர்ந்தது
இந்த வீட்டில் தான்.

தீபாவளி, பொங்கல்
எந்தையின் திருமணம்
எல்லாம் அவ்வப்போது
இந்த வீடு
கண்டிருக்கிறது.....

இன்னும்
சாணமிட்டு
மெழுகுவாள்
அம்மா.....
எப்போதையும் விட
இன்னும் - இந்த
எட்டடி காம்பரா
இன்னும்
அழகாக தான்
இருக்கிறது......

ஒரு
ஏணி - எப்போதும்
வீட்டில் இருக்கும்.
முகில்களுக்கு
கோபம் வரும்
போதெல்லாம்
இந்த
ஏணிக்கு வேலை.....
கூரையில் பொலித்தின்
பைகளை விரிக்க...
ஓட்டையில் தார்வைத்து
அடைக்க.......

முகில்களுக்கு
கோபம் வரும் போதெல்லாம
ஏணிக்கு வேலை

ஏணிக்கு
வேலை வரும்போதெல்லாம்
அப்பா
அழுவார்
நாங்கள்
நனைவோம்
அன்றும்
சாணமிட்டு மெழுகுவாள்
அம்மா

என் வீடே

வாழ்வில் மனிதனுக்கு
ஆறடி என்பதுபோல்
நீயோ
தேயிலையின் வரலாற்றில்
எமக்கு
எட்டடி.
ஆனால்
எந்தையின் தாயின்
உழைப்பின் உற்பத்தியே
நீ தானே......
இன்றும் கூட
நீ
இன்னும் அழகாய்த்தான்.....
சாணமிட்டு
மெழுகுவாள்
என்
அம்மா.......

வீடே
என் இனிய வீடே
தேயிலை மலைகள்
யாவும்
எம்மவரின் வரலாற்று
சான்றுகள் - கல்லறைகள்
என் நாம்
பாடல் பிறப்பித்த
பினனும்
குடியுரிமை
அத்தாட்சி பத்திரமா
தோண்டிப் பார்
எம் பாட்டனின்
எலும்பு துண்டு கிடக்கும்
என்று
சான்று கண்ட
பின்பும்,
ஓர் நொடித்த
சேவல்
தன் இறுதி காலத்தில்
தன் பேரக்குஞ்சுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதூகலமாய்
கூவி நிற்கும்
சத்தியம் செய்யும்,
எந்தைக்கும் தாய்க்கும்
சொந்தமான இவ்வழகை
எந்தைக்கும் தாய்க்கும்
எனக்கு மென
எழுதி தருவதாய்.....
பதிலியாய்
தொழிலாளியின் புள்ளடியை
கோரி, இறைஞ்சி
இறைஞ்சி, இறைஞ்சி
வணங்கி.....
சொல் வீடே
என் இன்ப வீடே
இந்த
நொண்டிச் சேவல்
அறியுமா
மெழுகிய சாணத்துள்
எந்தையின் தாயின்
இரத்தமும் ஆவியும்
கலந்துள்ள
விந்தையை?

இந்த
நொண்டிச் சேவல்
அறியுமா
மெழுகிய சாணத்துள்
ஏன் பாட்டன் முதல்
சி. வி. வரை

துயில் கொள்ளும்
கவிதையை?

வீடே
என் இனிய வீடே
இன்று
முகில்களுக்கு
கோபம் வராவிட்டால்
பரவாயில்லை.
எமக்கு வரும்.
என் தந்தைக்கு வரும்.
எம் பாட்டனுக்கு வரும்.
அவர் எழுதிய
கவிதைக்கும் வரும்
சொல்
மெழுகிய
சாணத்தில்
மிச்சம் எங்கே? ●

– பீஷ்மா –

காா்க்கி இலக்கியம்

பயம்தான் நம்மையெல்லாம் அழித்து விடுகிறது. நம்மை அதிகாரம் பண்ணி ஆளுகிறார்களே, அவர்கள் நமது பயத்தை வைத்துத்தான் காரியம் சாதிக்கிறார்கள்.

– தாய்


காா்க்கி இலக்கியம்

ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நம்மிடத்தில் நேர்மையான உண்மையான தீர்ப்பும் தீர்மானமும் இருந்தேயாக வேண்டும். போதுமான அளவுக்கு சாப்பிடுபவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆனால் சிலர்தான் நேர்மையானவர்கள்.

– தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரிகை



வண்ணங்களை குழைத்து பூசுபவள்
[illegible]
வாழ்வை குழைதது வணணம தருபவன
இவன்.
[illegible]
கவிதையாக,
இது [illegible]

வழமையான ஓர் அதிகாலையில் தற்செயலாகத்தான் அவளது ஓவியத்தை நான் காண நேர்ந்தது.

என்றைக்கும் போல் அன்றும் விளையாட்டுப் பக்கத்தை நோட்டம் விட்டு விட்டு, பின் மாமூலான தலையங் கங்களுக்குத் தாவி, பின்னர் ஓரமாய்க் கிடக்கும் 'கெல்வின் துணுக்கையும்' பார்வையிட்டு சற்றே ரசித்து பின் இணைக்கப்பட்டிருந்த சஞ்சிகைப் பக்கங்களுக்குள் நழுவ, அங்கே அவள் கிடந்தாள்.

சதுரம் கட்டி, அதற்குள் ஓர் புன்னகைக்கும் ஜீவனை இவள் நிறுத்தியிருந்தாள். கூடவே ஓவியத்தின் விளிம்பில் ஓவியத்தின் கருத்தைத் தெளிவுற வெளிக்கொணரும் நான்கு வரிக் கவிதை வேறு.

திகைத்தேன். என்ன இது? யார் இது! பூக்களை அள்ளி என் மேல் திடீரென வீசியடித்தாற் போல்!

இன்றைய ஓவிய உலகை ஓரளவு அறிவேன். பேதைமை மிக்க வெத்து வேட்டுகளும் திரிபுற்ற பாலியல் ஏக்கங்களும் ரொம்பத்தான் இடத்தை அடைத்துக் கொண்டு.........! நிற்கும் காட்சி ஒரு புறம்.

இது பேதாததிற்கு இதற்கேற்றாற் போல் தத்தமது மூளைகளை கசக்கிப் பிழிந்து அவற்றிலுள்ள இல்லாததுக்கும் பொல்லாததுக்குமான கண்டு பிடிப்புகளை நிகழ்த்தி அவற்றுக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கூடு தமக்கும் ஓர் அங்கீகாரத்தை வழங்கித் தீர்க்குமாறு கையேந்தி மன்றாடும் விமர்சன கூட்டம் மறுபுறம்.

இந்த மாரடிப்பில் இது என்ன புது மரபு? எங்கிருந்து வந்தது? யாரிவள்? திகைத்துப் போனேன்.

* * * * * *

எனது நண்பன் - அவன் சற்றே ஓர் வித்தியாசமான பிறவி. மனிதர்களின் ஒன்று சேரலில், அவர்களின் வஞ்சகமற்ற அந்நியோன்னிய சேர்க்கையில் தன்னை மறந்து கவிதை காணும் இனத்தைச் சேர்ந்தவன்.

**- கேகாலை கைலைநாதன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவான்; விளையாட்டுப் போட்டிகளில் அவனுக்குப் பிடித்த நிகழ்ச்சியே ஒலிம்பிக் தீபத்தை ஏற்றும் காட்சிதானாம்.

அத்தனை மனிதர்களின் கூட்டுச் சேர்க்கையின் விளைபயனாய், இத்தனை ஒழுங்குகளையும் பூர்த்தி செய்து விட்டு, பின் ஓர் பூதாகரமான நிசப்தத்தையும் ஏற்படுத்தி, அங்கே, அதன் பின்னணியில் தீபத்தை ஏற்றும் காட்சி, அதில் அவர்களும் இவனுமாய் ஒன்றுபடும் விதம் – இவனுக்கு மயிர்கள் சிலிர்க்குமாம்.

ஓர் பயிலுநர் – ஆசிரியர் கல்லூரியின் விரிவுரை யாளனாகக் கடமையாற்றும் இவன் தனது இளம் ஆசிரியர்கள் ஒழுங்கு செய்யும் நாட்டியங்கள், கூத்துகள், பின் வாய்மொழிப் பாடல் சேகரிப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படும் தோட்டத்து பயணங்கள் – இவற்றுக்காய் இந்த பயிலுநர் ஆசிரியர்களால் இரவிரவாய் மேற்கொள்ளப்படும் முஸ்தீபுகள், தயாரிப்புகள் – அதற்குள் துளிர்க்கும் ஆனந்தங்கள், அனுபவங்கள் – பின் இரவில் வீடு திரும்ப முடியாது போவதால் இவன் பத்தினி காலையில்வீசும் அனல் பார்வை, இத்தியாதி இவற்றை, தான் சிக்கெடுத்துக் கொள்ளும் நேர்த்தி – இவை யாவற்றையும் சுவை குன்றாமல், வாய் நிறைய நெளியும் புன்னகையுடன் எனக்கு எடுத்துரைப்பான்.

ஓர் தேயிலைத் தோட்டத்து பாடசாலை குவாட்டர்ஸ் களில் ஒன்றில் தன் குடும்பத்தோடு குடியிருக்கும் இவன், சமயங்களில், அங்குள்ள இளம் தொழிலாளிரின் மனுஷப்- பண்பு மிக்கபாடல்களை, அவர்களது நேயமிக்க வாழ்க்கை நகர்வுகளை, அவர்களும் அவர்களது பிள்ளைகளுமாய் சுமக்க வேண்டியுள்ள வாழ்க்கைச் சுமையின் நிர்ப்பந்தங்களை நான் கேட்டுக்கொள்வ தற்கேற்ப உணர்வு பூர்வமாய் எனக்காய்ச் சித்தரிப்பான்.

அவ்வப்போது ஓவியக் கலையையும் ஒரு கைபார்க்கும் இவனிடம்தான் உடனே இந்த ஓவியத்தைத் தூக்கிச் செல்ல எனக்குத் தோன்றியது.

**ரசிகன் விமர்சகன், கலைஞன் – இவர்கள் மூவரும் ஒரே குடும்பத்தை சேர்ந் தோராய் ஒத்த சுவையரும்பை உடையோராய் இருப்பது ஒன்றும் அதிசயமானதல்ல. வாழ்வின் பிறிதொரு வேரிலிருந்து பிறக்கும் மனிதர்க்கே இத்தகைய குடும்பத்தாரின் உணர்வுகள் அந்நியப்பட்டு நிற்கும்.**

சொக்கிப் போனான் பயல். யாரிது, பூப்போல என்றான். முகம் தெரியாத, பெயர் அறியாத பூ என்றேன் நான். புன்னகைத்தான்.

* * * * * *

உழைக்கும் மக்களின் அரசியல் என்பது அவனுக்கு அந்நியமானதொன்றல்ல என்பதாலோ என்னவோ இவ்வோவியத்தை அவன் பிரமாண்டமாய் ரசிப்பதாய் எனக்குத் தோன்றியது.

அவன் கூறுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது.

உலக ரீதியாகவே உழைக்கும் மக்கள் தமது உறுத்தி நிற்கக் கூடிய அடையாளத்தை அரசியலிலும் கலைகளிலும் குறிப்பிடத்தக்க அளவு இழந்து நிற்கும் இந்நாட்களில்.......' என்ற ரீதியல் அவனது தர்க்கம் உருக் கொண்டிருந்தது.

பின்னர் ஒவ்வொரு செவ்வாய்க்காகவும் நானும் அவனுமாய் எக்கச்சக்கமாய் ஏங்கிக் கிடக்கத் தொடங்கினோம்.

இன்று என்ன வரைந்திருப்பாள்.....? இவன் கூறுவான், ஓவியத்தைத் தன் வலக் கரத்தால் பிடித்து தன் மென்மையான கண்களால் அவற்றை நிதானமாக வருடியவாறே;

'மென்மையாய் இருக்குதுல்ல'

'ம்' என்பேன் நான்.

'மெல்லிய மேகம் மாதிரி'

'ம்'

'மெல்லிய மேகமா, மெல்லிய சோகமா'

'மெல்லிய மேகம்'

பயல் இப்படிப்பட்டவன்தான். ஒன்றிப் போனால் ஒன்றிப் போனதுதான். சிரித்துக் கொண்டேன்.

* * * * * *

ஆனால் அந்த ஓவியங்களும் அப்படிப்பட்ட வையாகத்தான் இருந்தன.

அடித் தளத்தில் கிடந்து அல்லலுறும் வாழ்கையை, அவ்வாழ்க்கை பிறப்பிக்கும் தன்மானம் கலந்த மூச்சை, பெண்களின் விடுவிப்பை, ஆண்களின் ரோமம் அடர்ந்த முரட்டுக் கரங்களின் ஆதிக்கங்களை, இந்நாட்டைச் சேர்ந்த அநேக மக்களின் சிதறிய வாழ்வுகளின் பின்புலத்தில் நாம் வணங்கும் எண்ணற்ற கடவுள்களின் கையறுந்த நிலை யினை.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் ஒரு புறம் கிடக்க, இவற்றை அவள் கூறவந்த விதம்......... அதன் வனப்பு...... தன் தூரிகையை அவள் நகர்த்திச் சென்ற நேர்த்தி – அதன் மேன்மை.

வாழ்வில் இருந்து வேறுபடாமல், தொலைதூர தீவுகளுக்குள் ஒதுங்கிப் போகாமல் மெல்லிய மேகங்களின் சிரத்தை மிக்க பரவலாய் அவள் விரிந்தாள் – நாங்கள் ஒன்றினோம்.

* * * * * *

கிழமைகள் சென்றன. தொடர்ந்தாற்போல் வெளிவந்த அவளது இரண்டொரு ஓவியங்களில் குறிப்பிடத்தக்க அளவு தன்னை மூழ்கடித்த பின், நீண்ட ஓர் கவிதையைத் தூக்கிக்கொண்டு எனைக் காண வந்தான் நண்பன்.

நீண்டிருந்தாலும் ஒருவித வருடலுடன் அழகாய் இருந்த அக்கவிதை இப்படி ஆரம்பித்திருந்தது;

ஒவ்வொரு செவ்வாயும்
உனது
மிருதுவான ஓவியங்கள்
தம் வழியே
ஓர் உறுதியைக் காட்டி நிற்கும்.
எவ்வளவு மென்மையாய்
தீட்டுகின்றாய் என் அன்பே.
ஏதோ
பெயர் தெரியா
கனவுலகில் இருந்து
மெல்லிய நின் மேகங்களிடம்
எமக்கென
ஓர் செய்தியைச் சொல்லி
அனுப்பி வைத்தாற் போல்.......

* * * * * *

நீ,
மௌனமாய்
எம் இதயத்தில்
பசுமையை விரித்து – பின்
மெல்லிய நின்விரல்களால்
மிருதுவாய்,
மிக மிருதுவாய்
அவற்றை வருடி
எத்தனை துயரோடு
எத்தனை கரிசனையோடு
எத்தனை வருத்தத்தோடு
ஓர் வரலாற்றின் செய்தியை
ஓர் தாய்மையின் அழகோடு
விதைத்து நிற்கின்றாய்......

நிறுத்தி அவன் முகத்தைப் பார்த்தேன். மௌனமாயிருந்தான். மேலே வாசித்தேன்.

என் அச்சம்
எல்லாமே இதுதான் –
முகம் அறியா, என் இதமே
எத்தனை நாட்கள்
இதே உறுதியுடன்
இதே பாலையில்
உன் பசுமையைக்
காப்பாற்றிக் கொள்வாய்?
கோரையும் முட்களுமாய்
தழைத்துப் பரவி
விரவும்
இந்த விஷப் பரப்பில்
என் இதமே
எங்குதான் ஓர் போக்கிடத்தைக்
கொள்வாய்?
அன்பே,
உன்னை வருடுகின்றேன்.
என்
இதயத்தின் ஆழத்திலிருந்தே
வருடுகின்றேன்.
உன் இதயத்தின்
நாகரீகமிக்க இவ்வீரலிப்பு
தூய வாஞ்சை மிக்க
வாழ்வின் சௌந்தர்யங்களால்......
மானுடத்தின்
செறிந்த கலாச்சாரத்தால்......
மனுக் குலத்தின் பொக்கிஷ மனிதர்களின்
ஈரம் சொரிந்த அறிவுத்திரட்சியால்.....
மேலும் பசுமையுறுவதாக.
மேலும் உறுதியுறுவதாக.
உன் மேகங்களிடம் சொல்
அவை ஆற்றுவது
ஓர் வரலாற்றுக்
கடன்
என்று.....
உன் மேகங்களிடம் சொல்
அவை ஏந்துவது
மனுக்குலத்தின்
ஓர் துயர் மிக்க காதை என்று.....
உன் மேகங்களிடம் சொல்
அவை மீட்ட முயல்வது
ஓர் புதிய பள்ளியெழுச்சி என்று....
கூடவே, கூடவே
உன் மேகங்களிடம் சேர்த்துச் சொல்
முகம் தெரியாவிட்டாலும்
அவற்றை காதலிக்க
இங்கே
ஈரமிக்க மனிதர்கள்
என்றும் இருப்பார்கள், எம் மலைகளில்
காத்திருப்பார்கள்
எனும்
எம்மவரின்
ஈரமிக்க வார்த்தையிதையும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான். இந்த மலைப்பிரதேசதங்களிலோ தொழிலாள மக்களது போராட்டம் ஒரு நாளின் யதார்த்தம் இங்கு. ஆனால் இவள் எங்குள்ளவள்? இவளின் பின்னணி யாது?

வாசித்து முடிய, 'காதல் கொண்டு விட்டாயோடா பயலே' என்றேன்.

சிரித்தான்.

பின், 'இதன் மேல் காதல் கொள்ளாமல் எதன் மேல்தான் காதல் கொள்வதாம்' என்றான் பயல், பதிலுக்கு. நான் சிரித்தேன்.

* * * * * *

அவளது ஓவியங்கள் அடுத்தடுத்து பிரசுரமாயின. பின்னர் பல கிழமைகள் கழிந்து, எக்குத் தப்பாய்த்தான், அவள் குறித்த மேலும் சில விபரங்களை நாம் அறிய நேர்ந்தது. - அதுவும் கூட இன்னுமொரு ஓவிய நண்பனுக்கூடாகத்தான்.

இந்த ஓவிய நண்பன் கூட தற்செயலாய் எமக்கு அறிமுக்மானவனே. பெயர் ஜகத்.

இவனது கண்காட்சி ஒன்றை பார்த்துவிட்டு அவனுடன் அளவளாவிக் கொண்டிருந்ததற்கூடு உருவாகியிருந்த நட்பு அது.

சிறுபான்மை மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொலைகளை, பாதகங்களை இந்த ஓவிய நண்பன் - ஜகத் - இவன் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவன் என்ற போதிலும் - மிக நேர்மையாகவும் அப்பட்டமாகவும் வடித்திருந்த துணிவும் நாகரீகமும் எம்மை அவன்பால் ஈர்த்திருந்தது.

அவன் தேர்ந்திருந்த வடிவம், ஓவியம் சார்பாய் அவன் கொண்டிருந்த தத்துவம் என்பன எமக்கு பொருந்தி வராவிட்டாலும் அவன் கொண்டிருந்த மனித நேயத்துக்கு மரியாதை செலுத்த நாம் கடமைப் பட்டிருந்தோம்.

அன்று இரவு உணவுக்காய் அழைத்திருந்தான் எம்மை.

சம்பாஷணை வழமை போல் பல்வேறு ஓவியர்கள், விமர்சகர்கள் குறித்து அலைபாய்ந்தது.

'அப்படி என்றால் இவற்றையும் ரசிப்பவர்களை பொறுத்து என்ன கூறுவீர்கள்' என்றான் ஜகத்.

'குறிப்பிட்ட ஓவியத்தை போற்றி வரைபவனையும், அதே ஓவியத்தை ஏற்று ரசிப்பவனையும், அதேஓவியத்தை அங்கீகரித்து விமர்சிப்பவனையும் வாழ்க்கை தனது ஒரே வேரிலிருந்தே உருவாக்கிக் கொள்கிறது. ரசிகன், விமர்சகன், கலைஞன்- இவர்கள் மூவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தோராய் ஒத்த சுவையரும்பை உடையோராய் இருப்பது ஒன்றும் அதிசயமானதல்ல. வாழ்வின் பிறிதொரு வேரிலிருந்து பிறக்கும் மனிதர்க்கே இத்தகைய குடும் பத்தாரின் உணர்வுகள் அந்நியப்பட்டு நிற்கும்' என்றான் எனது நண்பன்.

தலையை ஆட்டியவாறே 'தர்க்கம் உங்கள் தொழில் போல' என்றான் ஜகத். பின் கதை 'கீத்' குறித்து எழ ஜகத் தன் நண்பனின் கருத்தை வினவினான்.

'வாழ்வதற்காய் இன்னுமொரு நூறு வருடங்களை இந்த தொண்ணூறு வயது வயோதிகனுக்கு இயற்கை ஈந்திருந்தாலும் பெண்களின் வளைவுகளை கீறிக் கீறித் தீர்ப்பதிலேயே சொகுசாய் அவற்றை செலவழித்திருப்பான்.'

'பாலியல் குறித்து ரொமாண்டிக்காகவும் மோகனமாகவும் ஆவன படைத்துள்ள கலைஞர்கள், உலகுக்கு ஒன்றும் புதியவர்கள் அல்ல. காலம் காலமாய் நீளும் அவர்களின் நீண்ட பட்டியலில் இந்த தள்ளாத வயதினனுக்கும் வசதியான ஓர் இடம் உண்டுதான்' என்றான் என் நண்பன்.

சிரித்தான் ஓவியன்.

'பின்னர் யாரைத்தான் போற்றுவீர்கள்' என்றான் தொடர்ந்து.

நண்பன் கூறினான்,

'உங்கள் ஓவியத்தின் உள்ளடக்கத்தை..... பின் பெயர் தெரியாத ஓர் பெண், செவ்வாய் தோறும் கீறுபவள்- அவளது கீற்றுக்கள்......

'ஓ நீங்கள் குறிப்பிடுவது அவளை.......'
பின் கூறினான் 'அவள் பயின்றது சீனத்தில்..... பகுதி நேர மருத்துவம் வேறு செய்கிறாள்.'

இப்போது எமக்கு புரிந்தது. அவளின் ஆளுமைக்கான பின்னணி யாது என்பது-ஆனால் அவளின் பரப்பு என்ன.....'

விலாசத்தைக்கூட ஓவிய நண்பனே தேடித்தந்தான் கொண்டாட்டமாய் அவனிடம் விடை பெற்றான் எ‹ நண்பன்.

* * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது செவ்வாய் தோறும் இவனது நச்சரிப்பு தாங்க முடியவில்லை. பத்திரிகையை வாங்கி வைத்துக்கொண்டு பொங்கும் ஆர்வத்துடன் என்னை என் அலுவலகத்தில் மடக்கிப் பிடித்து விடுவான்.

எனக்கோ முடிக்க வேண்டிய வேலைகள் எக்கச் சக்கமாய் மீதம் கிடக்கும் – கிழமைநாள் வேறு என்றபடியால்..........

ஆனால் இவனிடம் எதைச் சொல்ல எதைவிட? நச்சரித்து நச்சரித்து என்னை வீட்டுக்கு கொணர்ந்து சேர்த்து களைத்து நாற்காலியில் கிடக்கும் எனது கரங்களுக்குள் உவகையுடன் பத்திரிகையை திணிப்பான். நானும் எனை மறந்து ரசிப்பேன்.

* * * * * *

தொடர்ந்து வந்த கிழமைகளில் அவளுக்காய் அருமையான கடிதங்களை எழுதத் தொடங்கி யிருந்தான் நண்பன். கூறினான் – கொண்டாட்ட மாயிருக்கின்றதாம். அவளுக்கு வரைவதென்பது. ஏன் என்றேன் நான். முகமறியாத ஓர் மென் மலருக்கு எழுதுவது வேறு எப்படியிருக்குமாம், என்றான் இவன். கடிதங்களை வாசித்துப் பார்த்தேன்.

அன்றுவரை மொத்தமாய் ஐந்து கடிதங்களை எழுதியிருந்தான். அனைத்துமே குறிக்கத்தக்கவை. அவள் குறித்த அவனது கவிதையைப் போலவே அவனது கடிதங்களும் அவள் குறித்து ஓர் வருடும் தன்மையை கொண்டிருந்ததாய் பட்டது எனக்கு.

தனது ஓவியங்களில் ஒன்றில் அவள் குறித்திருந்தாள்; கடவுளே வரையறைகளால் பாதிப்புற் றிருக்கும்போது, எனது தூரிகை மாத்திரம் என்ன வாம் என்று.அதற்கு இவன், பெண்ணே, கடவுளை சிருஷ்டித்தது மனித குலத்தின் நொந்த பக்கம்தானே – ஆனால் உனது தூரிகையின் உருவாக்கமோ மனித இதயத்தின் வளமான சௌந்தர்ய பிரதேசத்திலிருந்துதானே என்று எழுதியிருந்தான்.

இன்னுமொரு ஓவியத்தில் கூறியிருந்தாள் 'அட இந்த சுவாத்தியம் எனது மூச்சை அடைத்து முறித்து விடும் போல இருக்கின்றதே' என்று.

அதற்கு இவன், யார்தான் இந்த மூச்சுத் திணறலை அனுபவிக்கவில்லை. எவனெவனுக்கு மனித நேயம் தொடர்பான இதயத்துடிப்பு உண்டோ அவனுக்கெல்லாம் இந்த மூச்சுத்திணறல் அந்நியமானதல்லவே. ஆனால் பெண்ணே, உனது ஓவியங்கள் ஒன்றை எனக்கு தெரிவித்து நிற்கின்றன. மூச்சை அடைத்து திணறடிக்கும் இந்த சுவாத்தியத்தில் தான் இதனையும் மீறி இறக்கை விரிக்கும் பலமான நுரையீரல்களும் ஜனனமாகின்றன எனும் சேதியை.........' என்றெல்லாம் வடித்திருந்தான்.

இதற்கெல்லாம் ஒரு பதிலாவது கிடைத்ததாடா' என்றேன் நான்.

அதற்கு இவன், 'பதில்கள்? யாருக்கு வேண்டுமாம். முகமறியாமல் அவள் வாழட்டும். எனது உணர்வையே அவளும் பிரதிபலித்து, மலைகளை பாதுகாத்து முகமறியாமல் இந்த உலகின் எந்த ஓர் மூலை முடுக்கிலோ, எங்கேயோ அவள் வாழட்டும் என்றான்.

மலைகளை பாதுகாத்து......? அட என் பயலே! என் மனது உள்ளுக்குள் அவனை அன்பாய் வருட 'தேநீர் குடிப்போமா' என்றேன் நான்.

* * * * * *

இன்றும் செவ்வாய். ஏன் இவன் வரவில்லை. 'உணவு வேளையின்' போதுதான் எனக்கும் நினைவில் தட்டியது...... ஓ, பத்திரிகையும் இன்று பார்க்கவில்லை......... இவனையும் காணவில்லை.

பக்கத்து அறைக்கு கேட்டு அனுப்பினேன் அந்த ஆங்கில பத்திரிகைக்காக. வித்தியாசமாக தீட்டியருந்தாள். விதி விலக்காய் அவளது 'நான்' இவ்வோவியத்தில் விழித்துக்கொண்டு முனைப்பாய் நின்றிருந்தது. அதற்கேற்றாற் போல் நிறம் வேறு திரிந்த நிலையில்............

சோர்ந்து போனானோ பயல்? இவளது அண்மைக் கால இரண்டொரு ஓவியங்கள், இப்படித்தான், சற்றே வேறுபட்டு, நசிவின் எல்லையைத் தொட்டுத் தொட்டு மீண்டிருந்தது. இவளது நிறங்கள் வெளிறத் தொடங்குகின்றனவோ.....?

உணவு வேளைக்கு செல்லும்போது நண்பனின் அலுவலகத்துக்குச் சென்றேன் –அவனைக் கூட்டிச் செல்லும் நோக்குடன், அவனுக்கும் நிரம்பி வழியும் வேலைதான். இருந்தாலும் வந்திருப்பானே....

அவனது அறைக்குள் நுழைந்தவுடன் அவன் மேசையில் ஓரமாய் மடித்து வைக்கப்பட்டிருந்த பத்திரிக்கையை கண்களால் நோட்ட மிட்டு விட்டு, பின் அவன் முகத்தை அமைதி யாகப்பார்த்தவாறே, மேசையின் முன் கிடந்த நாற்காலியை இழுத்து அமர்ந்தவாறே 'என்ன நினைக்கிறாய்' என்றேன்.

அடுத்த கடிதத்தில், அவளுக்கு எழுதியிருந்தான் – 'பெண்ணே உன்னைக் காணவில்லை. எங்கு சென்றாய்? எப்படித் தொலைந்தாய்?–'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தொடர்ந்திருந்தான்; 'உன் அண்மைக்கால ஓவியங்களில் உன் இதயத்தை எம்மால் காணவே முடியவில்லை. உனது மூளை மாத்திரம் உறுத்தி நின்றது. ஆனால் கடைசியாய் பிரசுரமாகியிருந்த உன் இறுதி ஓவியத்திலோ ஓர் இதயத்தை மீண்டும் நாம் காண்கின்றேனாம். ஆனால் நாங்கள் அறிந்திராத, எமக்கு பரிச்சயமில்லாத புது இதயம் இது. யாருடையது இது? உன் வாழ்நிலை மாறிப்போனதா? அந்நியப்பட்டுப் போனாயோ அல்லது அந்நியப்பட்டுக் கொண்டிருக்கின்றாயோ? நாம் பயந்தது நடக்கின்றதா? உன்னை 'நீ காப்பாற்றிக் கொள் பெண்ணே........'

* * * * * *

கேட்டேன் அவனிடம்; இவ்வளவு மினக்கெடு கின்றாயே! ரோஜா உனக்குப் பிடிக்கின்றது - எனக்குப் புரிகின்றது. ஆனால் ரோஜாவின் மேல் உனக்குள்ள ஈடுபாட்டிற்காக மரவள்ளிகள் மேல் எல்லாம் நீ நீர் ஊற்று கின்றாயோ........?

சிரித்தான் நண்பன். பின் கூறினான்;

'தெரியவில்லை. ஆனால் ஊற்றினால்தான் என்னவாம்?
'என்னவா..... ரோஜாக்கள் மலராது தெரியுந்தானே? என்றேன் நான்.
மௌனமாய் இருந்தான்.
பின் நானே தொடர்ந்தேன்.
'மிஞ்சப் போவது எது தெரியுமா?
'தெரியும்' என்றான்.
'எது'
-'என் இதயம், நீ' என்று சிரித்தான், 'இவன் - இந்தத் திருடன்!
அப்பப்பா......

* * * * * *

தொடர்ந்து வந்த ஓவியங்கள் ஓரளவு நேர்த்தியாய்ப் பிரகாசித்தன. இவனது கடிதங்களின் பாதிப்போ? இவனும்தான் எவ்வளவு நேர்த்தியாய் மினக்கெட்டு-குறைந்தபட்சம் இரண்டு மணி நேரமாவது ஒவ்வொன்றுக்கும் எடுத்திருப்பான்.

அன்று சந்தோஷமாய் வந்து சேர்ந்தான். முகமெல்லாம் ஓர் பூரிப்பு. அவனது அழகிய இதழ்களின் ஓரமாய் மிக மெலிதாய், செல்லமாய் ஒளிந்து நடம் புரியும் இளம் குறுநகைவேறு.

என் முன்பாய் அமர்ந்து நீட்டினான் அவளது அழைப்பிதழை.

பிரித்துப்பார்த்தேன். அவளது கண்காட்சிதான். இது குறித்து பத்திரிகை வாயிலாக ஏற்கனவே அறிந்து இருந்தேன்.


ஒலி நாடா

# வெளிவருகிறது

# மதுர கவியின்

# கவிதாப் பிரவாகம்

கவிதைகளுக்கு இசைப் பின்னணியமைத்து ஒலிவடிவில் வெளிப்படுத்துகின்ற இலங்கையின் முதலாவது கவிதை ஒலி நாடாவாக மதுரகவியின் கவிதாப்பிரவாகம் ஒலி நாடா வெளிவர உள்ளது.

இலங்கை தமிழ் இலக்கிய உலகைப் பொறுத்த மட்டிலுமின்றி சிங்கள இலக்கிய உலகை பொறுத்த வரையிலும் கூட இது ஒரு புது முயற்சியாக அமையும்.

ஒலிநாடா என்ற போதிலும், வைரமுத்துவின் ஒலி நாடாவிலிருந்து வித்தியாசப்பட்ட கவிதைகளாய் இவை பிறிதொரு தளத்தில் மலர்ந்துள்ளன.

இக்கவிதைகளில் பெரும்பாலானவை, இலங்கைத் தமிழரின், இன்றைய, வாழ்நிலை அனுபவ வெளிப்பாடாக உருக்கொண்டுள்ளன.

அகதி வாழ்க்கை, யுத்தம், நிர்க்கதி, காதல், மலையகத்தமிழரின் வாழ்நிலை, புலம் பெயர் வாழ்க்கை, தத்துவ விசாரணை என பல்வகைப்பட்ட விடயங்களாக இவை விரிந்த போதிலும் தளம், இன்றைய இலங்கைத் தமிழரின் வாழ்நிலையாக அமைகிறது.

*வாழ்க்கை குரூரமானது*
*என மறுபடி மறுபடி நிரூபிக்கப்பட்டாலும்*
*வாழ்வின் மீதான காதலை மட்டும்*
*யாராலும் உதறிவிட முடிவதில்லை*

என கூறிக் கொண்டு இதயங்களோடு பேச விழைகின்ற இக்கவிதைகளுக்கு இசையமைத்திருப்பவர் தென்னிந்தியத் திரையிசையமைப் பாளராகவுள்ள இலங்கையரான காண்டீபன்.

அப்துல் ஹமீடின் முன்னுரை, முகப்பு வரிகளுடன், கவிதைகட்கு குரல் கொடுத்திருப்பவர்கள் மதுரகவி, கமலினி செல்வராஜன், சி. சிவகுமார், செல்வன் தினேஷ் பேரானந்தம் போன்றோராவர்.

டிஜிட்டல் முறையில், ஸ்டீரியோ நாடாவாக ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள, 17 கவிதைகளை உள்ளடக்கிய, இவ் ஒலிநாடாவின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெறவுள்ளது.

தகவல்: சத்தியபாலன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உனக்கும் எனக்கும் இடையிலான தொலைவை நீக்கும் பொருட்டு' என்று பொறிக்கப்பட்ட வாசகங்களுடன்.

அழைப்பிதழை, அதனதுகவரை, 'தடயங்களுக்காக' தேடினேன் நான்.

கூட்டைப் பார்வையிட்டேன். அவள் தன் கரம்பட எழுதியருந்தாள் இவனது முகவரியை. பத்திரிக்கையில் கையொப்பமிட்டிருந்த அதே எழுத்துக்கள்.

நிதானமாக, அந்த வெண்ணிறமான நீண்ட கடித உறையில் அவளது எழுத்துக்கள் முத்து முத்தாக உருண்டிருந்தது.

உறையை இன்னும் சற்று கூர்ந்து பார்வையிட்ட போது அவள் இன்னும் நிறையவே மினக்கெட்டிருப்பது புரிந்தது.

பென்சிலால் மெல்லிய நேர்க்கோடுகள் பட்டும் படாமலும், கண்களில் தென்படாதவாறு மெலிதாக கீறி, பின் அதன் மேல் தன் முத்து முத்து எழுத்துக்களை உருளச்செய்திருந்தாள் அவள். ஓ, இவனின் கடிதங்களை நேசிக்கத்தான் செய்திருக்கிறாய், என் அருமைப் பெண்ணே! நன்றி உனக்கு. என் அருமை நண்பனான இவனின், இவனது இதயத்தை, இவனது கவிதையை அறிவாயா பெண்ணே-அறிய கூடுமா உனக்கு..... யோசித்தேன் நான்.

* * * * * *

போக தீர்மானித்து விட்டேன். எந்த சந்தேகமும் இல்லாமல். ஆனால் இவனோ தடுமாறி நின்றான். போவதா இல்லையா?..... போவதா இல்லையா?

சரி கொழும்புக்கு சென்று, அங்கு தீர்மானிப்போம், செல்வதா இல்லையா என்று, என்ற எனது வாதம் இவனுக்கும் சரியாய் பட்டது.

காலை முழுவதும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல், இருந்த அனைத்து வேலைகளையும் முடித்து மாலை ஆறுமணியளவில் கண்காட்சியை பார்வையிட திட்டம் தீட்டினோம்.

கண்காட்சி கூடத்துக்கு அருகாமையிலேயே நூலகமும் அமைந்திருந்தது சௌகரியமாய் போய்விட்டது. மூன்று மணிய்ளவிலேயே எமது அனைத்து வேலைகளும் முடிவுற ஆறுமணிவரை நூலகத்தில் தஞ்சம் புகுவதென தீர்மானித்தோம்.

எவ்வளவு நாளாகிவிட்டது, இந்த நூலகத்தில் நுழைந்து. எங்கள் மாணவப் பருவத்தில் எவ்வளவு நெருக்கமாயிருந்தது இந்நூலகம். எங்கள் குறும்புகளுக்கு, எங்கள் சண்டைகளுக்கு, எங்கள் வாதங்களுக்கு, பொருளற்ற எங்கள் கல்விக்கூட படிப்புக்கு - எல்லாம் இந்த நூலகம் தானே தஞ்சமாய் நின்றது.

முன்பு பரீட்சை நாட்களில் காலை ஆறு மணிக்கே வந்துவிடுவோம், வரிசையில் நின்று இடம் பிடிப்பதற்காய்.

பின களைத்து அலுத்து மாலை நூலகத்தைப் பூட்டும்வரை மனனம்-பொருளற்ற வெறுப்புத் தட்டும் மனனம்.

இது தவிர பரீட்சையற்ற மற்ற நாட்களில் இந்த நூலகம் ஒரு பூஞ்சோலை எமக்கு. இலக்கியங்களைத் தேடிப்பகிர, கனவுகாண, போர் அடிக்கும் போது 'கன்டீன் தேநீர்' குடிக்க.... மங்கும் மஞ்சள் மாலைகளில் நூலகத்தை ஒட்டினாற்போல் கட்டப்பட்டு நீண்டிருக்கும் உலக யுத்த ஞாபக தூபியின் மேடைகளில் வானத்தைப் பார்த்தவாறு அண்ணாந்து அருகருகே கிடக்க......

மெதுவாய், மிக மிருதுவாய் என்றுகூட சொல்லலாம், சப்தமே இல்லாமல் வானத்திலிருந்து மழை மிக மெலிதாய் தூறிக்கொண்டிருந்தது இப்போது.

இதோ இந்த தூபி! மாலை வேறு மஞ்சளாகத்தான் இருக்கிறது, அன்று போல.

முன்பொருநாள், இப்படித்தான், இந்த தூபிக் கட்டடத்தில், நானும் தற்போது கனடாவில் இருக்கும் என் நண்பன் கேசவனும், ஒரு மாலையில் கிட்டத்தட்ட இதே நேரத்தில், வானத்தை அண்ணாந்து பார்த்தவாறு அருகருகே கிடந்தோம்.

எமது சம்பாஷணை அந்த அறிவார்ந்த தாடிக்கார ஜெர்மனியனைப்பற்றி யாரோ எழுதியிருந்த வாழ்க்கை சரிதம் பொறுத்ததாய் இருந்தது.

'அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய்' என்று அந்த பால்ய காலத்து நண்பனை நான் கேட்டிருந்தேன்.

மஞ்சள் வானத்தில் அவன் விழிகள் லயிக்க, மனம் எங்கேயோ சஞ்சரிக்க சற்றே உணர்ச்சி வசப்பட்டாற் போல் அவன் கூறியிருந்த பதில் இன்னும் என் நினைவில் தேங்கி கிடக்கின்றது.

'உழைத்துத் தேயும் மக்களின் கரங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, ஒரே கரமாக்கி எழுதச் சொன்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவார்கள், அவனைப்பற்றி, ஒருவரி. ஒரே ஒரு வரி – 'எங்கிருந்தோ வந்தான்' என்று - நான் யார் அத் தலைவனைப் பற்றிக் கூற.... என்ற அவனது அன்றைய பதில் இன்றும் எனது நெஞ்சில் மாத்திரமல்ல, இதோ எனதுபக்கத்தில் நிற்கிறானே இவனது நெஞ்சிலும் வாழ்கிறது என்பதை நான் அறிவேன்.

பதில் கூறிய அந்த பால்ய காலத்து நண்பனோ இன்று எவ்வளவு தொலைவில் வசிக்கின்றான்! அவன் எப்படி இருக்கிறான்? அவனது இன்றைய உளப்பாங்கு என்ன? தெரியவில்லை.

நேரம் சென்று விட்டிருந்தது. 'புறப்படுவோம்' என்றான் நண்பன்.

மண்டபத்தை அடைந்தோம். கண்கள் அலைந்தது. பத்திரிகையில் அவள் முகம் ஏற்கனவே பிரசுரமாகி யிருந்தபடியால் உடனடியாகவே அவளை அடை யாளம் கண்டடோம். கோதப்படாத தலை. பஞ்சாபி உடையில் , நான்கைந்து பேருடன் கதைத்தவாறே அப்பெரிய மண்டபத்தின் ஓர் மூலையில் நின்றிருந்தாள். ஓவியங்களைப் பார்த்துவிடுவோம்' என்றான் நண்பன். புரிந்தது. கதைப்பதா இல்லையா என்பதை பிறகு தீர்மானிக்கலாம். அதற்கு தேவை எழாமல்கூட போகலாம் என்பது எனது நண்பனின் தீர்மானம் போல.

முதலிலேயே எங்களுக்கு ஏமாற்றம்.

பிரமாண்டமாய் உயர்ந்திருந்த அந்த மண்டபத்தின் பெரிய சுவர்களில், பெரிய பெரிய கன்வாஸ்களில் அவளது கைவண்ணத்தைக் காணவந்த நாம், கையளவே இருந்த ஓவியங்களைக் கண்டு குறுகிப் போனோம். பத்திரிகையில் எந்த அளவில் தோன்றியதோ அதே அளவில்.

ஓர் ஐம்பது தேறும். மீண்டும் மீண்டும் அதே..... அதே.. என்ன இது?

முழுதாய் பார்த்து ஓர் வட்டமடித்து முடிய களைப்பு. ஒரே விதமான, ஒரே அச்சில் வார்க்கப்பட்டவை போலிருந்தது; இது , அவளது விசால பார்வை சம்பந்தமாக நெருடும் கேள்விகளை எங்கள் மனதில் எழுப்பச் செய்தது.

பேசுவதா? நண்பனின் களைப்பை நான் அறிந்திருந் தாலும் வந்ததே வந்தோம் பேசி விட்டே செல்வோம் என்று நான் அவனை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டேன்.

நண்பனும் ஏனோதானோவென்று, இப்போது வாயிற்படியருகே அமர்ந்திருந்த அவளிடம் ஓர் அந்நிய னாய் எட்ட நின்று 'ஒரு நிமிடம்' என்றான். மெல்ல புன்னகை செய்தவாறே எழுந்து வந்தாள் அவள்.

கேள்விகளுக்கான சிந்தையை, ஈடுபாட்டை நண்பனின் மூளை விடாப்பிடியாக அவனுக்குத்தர மறுத்ததை நான் கண்டு கொள்ள கூடியதாக இருந்தது. வாய்க்கு வந்தபடி கேள்விகளை கேட்டுவைத்தான்.

சீனத்தில் படித்த அவளிடம் சீனத்தைப்பற்றி சற்று கூறுமாறு வேண்டிக்கொண்டான்.

'உலகம் சமமாகவே இருக்கக்கூடாது. கூடவே கூடாது. ஒரே வகையாய், நேராய் மிக நேராய் நீட்டப்பட்ட நேர் பாதையில் என்னதான் இருக்கிறது. வளைந்து வளைந்து செல்லும் பாதையிலேயே அழகு கொலுவிருக்கிறது என்று புகட்டினாள் அவள்.

ஓர் படத்தை, என் அருமை நண்பனுக்கு தன் மெல்லிய விரலால் சுட்டிக்காட்டி, மகாத்மா காந்தியின் அறிவாற்றலோடு பிரகடனம் செய்தாள்.

'இது எனக்கு மிகவும் பிடித்த படம். நாளை பிடிக்காமல் போகலாம். நான் நாளை மாறக் கூடும்.... நாளை இது எனக்கு பிழையாகத் தென்படலாம்....'

இந்த தருணத்தில் யாரோ வர–பெரிய மனிதர்தான்– பேராசிரியர்-இதுபின்னால் அவளுக் கூடாக நாங்கள் தெரிந்து கொண்டது–அள்ளிக்குதித்து ஓடினாள், சம்பாஷணையை அப்படியே அந்த இடத்திலேயே போட்டுவிட்டு ஓடியவள், மீண்டும் குதித்து வேறு ஓர் திசையில் பறந்து ஓர் மேசையை நோக்கி ஓடி எதையோ பற்றி வந்து அந்த பருத்த மனிதரின் கரங்களுக்குள் அவசர அவசரமாய் திணித்தாள்–கண்காட்சி மலராயிருக்க வேண்டும்.

பெரிய மனிதரோ, ஐந்தே நிமிடத்தில் ஐம்பத்தெட்டு படங்களையும் 'ரவுண்டடித்து'விட்டு வந்து ஆசீர்வதித்து போகப்புறப்பட்டவரை வாயிற் படியில் மீண்டும் மடக்கி பிடித்து இழுத்துவந்து தன்னுடன் ஒரு போட்டோ எடுத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டாள்.

பின்னர் வாயிற்படிவரை சென்று வழியனுப்பிவிட்டு வந்த கையோடு நண்பனிடம் தொடர்ந்தாள்:

'அரசியலா.... இல்லையில்லை..... நான் சுதந்திரமானவள். முற்றாக, முற்றும் முழுதாக விடுபாடு அடைந்தவள் நான். விடுபாடு – இது என்னுடனேயே எப்போதும் இருக்கும்'

பின்னர் அவளாய் நண்பனை கேட்டாள்–ஒரு வேளை நண்பனின் சில விசித்திரமான கேள்விகளால் திடுக்குற்றதால் போலும்: 'நீங்கள் யார்'

நண்பன் கூறினான் 'நான் ஒரு ஆசிரியன். உங்களுக்கு ஏற்கனவே எழுதியுள்ளேன் என் பெயர்.'.........'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கணகள் மலர்ந்தன. குரலும் மென்மையுற்றது. ‘ஓ........ நீங்களா அது..... நினைத்தேன் உங்கள்..... கேள்விகளைக் கண்டு.... நல்ல கடிதங்கள்..... அனைத்தையும் தொகுத்து பத்திரமாய் சேகரித்து வைத்துள்ளேன்.....’

புறப்பட்டோம். குறிப்புப் புத்தகத்தில் எதையாவது எழுதிச் செல்லுமாறு நண்பனை வேண்டினாள்.

கூறினான் புன்னகைத்தவாறே, ஏற்கனவே அதிகம் எழுதி விட்டதாக.

இவளோ விடவில்லை. உங்கள் கையெழுத்தைப் பதித்துக் கொள்ளவேண்டும் இப்புத்தகத்தில் என்றாள் அவள்.

அவளது ஆர்வம் உண்மையானது என்பது புரிந்தது எனக்கு.

நண்பன் ஓர் பெருமூச்சை விட்டவாறே பேனாவுடன் மேசையில் விரிந்து கிடந்த குறிப்புப்புத்தகத்தின் முன் அமர்ந்தான். நிமிடங்கள் சென்றன. சுற்றும் முற்றும் பார்த்தான். என்னைப் பார்த்தான். என்னத்தை எழுதுவது என்ற கேள்விக் குறி அவனது முகத்தில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

எழுந்தபடி அவளிடம் கூறினான். சற்று யோசித்து விட்டு எழுதுகிறேன் என்று.

பின்னர் சற்று வட்டமடித்தான். மீண்டும் வந்த மர்ந்து மூன்று வரிகளை கிறுக்கினான். அவனுக்குப்பின்னால் நின்று அவன் வலது தோளில் என் கரத்தை வைத்த வாறு இளம் புன்னகையோடு அவன் எழுத எழுத வாசித்தேன்.

"தேடலை காத்திரமாக்கு. சரியான கீற்றை நீ பற்றக்கூடும்."

அவன் கடிதங்களில் இருந்து எவ்வளவு வித்தியாசப் பட்டிருந்தது இந்த வரிகள் என்பதை எண்ணிப் பார்த்தேன். அவளிடமிருந்து எவ்வளவு தொலைக்கு வந்துவிட்டான், இவன்.

அவள் எங்கள் பின்னாலேயே ஓடிவந்தாள். வாயிற்படி வரைக்கும் வந்தவள் எமது அவசர நடைக்கேற்ப அவசர அவசரமாய் கூறினாள் ஆங்கிலத்தில். உங்களைச் சந்தித்தது எத்தகு மகிழ்ச்சி.... எத்தகு மகிழ்ச்சி!

கடந்த கிழமைதான் நீண்ட காலத்தின்பின் நான் சந்தித்த எனது முற்காலத்து அரசியல் நண்பன் ஒருவன். என்னிடம் குறிப்பிடத்தக்க கசப்புணர்வுடன் கூறியிருந்தான், மூளை இருக்கிறவன் எல்லாம் திருடனாய் இருக்கின்றான். ‘நேர்மையானவன் எல்லாம் பைத்திய மாய் அலைகின்றான்’ என்று.

மண்டபத்தை விட்டு இறங்கி இருளில் நடக்கும் போது மௌனமாய் நடந்து கொண்டிருந்தான். என் நண்பனிடம் மெதுவாகக் கேட்டேன். என்ன, உனது ஓவியங்கள் எல்லாம் சிதைந்து விட்டனவா என்று.

அதற்கு அவன் ‘இல்லை சிதையாது’ என்றான். பின்சற்று தாமதித்து மெல்ல கூறினான்: ‘என் எழுத கோலும் தெய்வம், என் எழுத்தும் தெய்வம் என்னும் நிலை இருக்குமட்டும் என் ஓவியங்கள் சிதையாது என்றான்.

இவனது ஓவியங்களை எண்ணிப்பார்த்தேன். ஆம் அதுவும்கூட ஒருவகை தேடல்தான்.

‘அன்பான பெண்ணே, யார் நீ’ என்று தொடங்கியிருந்தது அது ●

# விழியோடு காத்து வந்த காதல்!

**இதயம் அறிந்து**
**உறவைப் பிரித்தால்**
**இரத்தத் துளிகள்**
**சுரக்காதோ?**
**இதயம் சுரந்த**
**இரத்தம் நனைந்த**
**கவிதை வரியும்**
**கனக்காதோ?**

உயிரோடிணைந்ததென்று கூறி
இரவோடும் பகலோடும்
விழியோடு காத்து வந்த
காதல்!

குயிலே! குயிலே!
ஓ மனக்குயில!!

சொல்லுக்குச் சொல்லு தேன்துளி சேர்த்து
உன்னோடு மட்டும் – அவள்
சொல்லி வைத்த வார்த்தைகளை
இதயத்தைத் தவிர
எங்கே நீ எழுதிவைப்பாய்?

இளவேனில் வந்ததும்,
இளமை தன்னை மீறிக்கொண்டதும்,
வழுவாதென நீ
வார்த்தைகளை நம்பிக்கொண்டதும்..

அழுது என்ன?
தவறு யார் செய்தது?

உறவென்று வந்ததும்,
உயிருருக வார்த்தைகளைத் தந்ததும்,
சிறகை விரித்ததும்,
பறந்ததும்...

ஓ! பறவை இனமன்றோ!
பதிவிரதம் இங்கேது?

விழிகளில்,
துளி நீரைத் திரளச்செய்யும்
நினைவுகளை மட்டும்
மனது ஏன்தான்
தனதென்று இன்னும்
சொந்தம் கொள்கிறதோ

இனியென்ன? – காதல்
உறவினில் விழுந்த காயம்
ஆறாது, அழியாது – உயிர்
வாழுநாள்வரை நின்று
வருத்துமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசு**

# வாசகருக்கு ஓர் மாபெரும் போட்டி!

*பதிலளித்த பெரியார் யாரென கண்டுபிடித்தால் ரூபாய் ஆயிரம் பரிசு*

**ஞான குருவின் பதில்கள் அடுத்த இதழில் இருந்து தொடரும். இந்த இதழில் மாத்திரம் ஞானகுருவுக்கு பதிலாய்...**

- **சமனல வெவ நீர்த்தேக்க அணைக்கட்டு உடைப்பெடுப்புக்கு யார் காரணம்? ஆங்கிலேய பொறியியலாளரா? உள்நாட்டுப் பொறியியலாளரா?**

  *தவறு. செல்லசாமியும் கதிரேசனும்தான் காரணம். சமனலவெவ அணையை அவர்கள் அலவாங்கு போட்டு உடைத்துக் கொண்டிருந்ததை நான் கண்ணாரக் கண்டேன்.*

- **இலங்கை கிரிக்கெட் அணி, இந்திய கிரிக்கெட் அணியிடம் படு தோல்வி கண்டது குறித்து உங்கள் கருத்து என்ன? இலங்கை அணி தலைவர் அர்ஜுனா ரணதுங்காவைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

  *நினைக்க என்ன வேண்டி கிடக்கின்றது. சாணக்கியம் தெரியாத பயல். இந்தியா வெத்தப் போவுதுன்னு தெரிந்த உடனேயே இலங்கை அணியிலிருந்து விலகி இந்திய அணியில் சேர்ந்திருக்க வேண்டியது தானே.*

- **உங்களுக்கு பிடித்த மிருகம் எது? அதைப் பற்றி ஐந்து வசனங்கள் கூறுங்களேன்.**

  *பசுத்தான்.*
  *பசு ஒரு நல்ல மிருகம்.*
  *பசு பால் தரும்.*
  *பசு அமைச்சு தரும்.*
  *பசுவுக்கு ஒரு வால், இரண்டு கண்கள் உண்டு.*
  *பசுவை வைத்து எயர்லங்கா உட்பட எல்லா வற்றையும் மறைக்கலாம்.*
  *பசுவுக்கு தனியாக ஸ்டாம்ப் (முத்திரை) வெளியிடுதல் அவசியம்.*
  *பசு ஒரு தேசிய மிருகம்.*

- **இனி, மலையகத்துக்கு புத்துயிர் தந்து ஓர் நம்பிக்கை நட்சத்திரமாய் திகழக் கூடிய இளம் தலைவர் யார்?**

  *தொண்டமான்.*

- **அரசிய தலைவர்கள் பொது சொத்துக்களை கையாடுவது தொடர்பில் விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்படுவது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

  *தேவையற்றது. வீண் செலவு. விசாரணைக் குழுக்கள் அமைப்பதனால் பொதுச் சொத்து வீணாக செலவழிக்கப்படுகின்றது. மேலும், அவை தனிப்பட்ட விவகாரம். அந்தரங்கம் புனிதமானது.*

- **பேரன் – பேத்தி, எயர் லங்காவுக்கு சொந்தமான 35 லட்சம் தொடர்பாக சண்டே டைம்ஸ் அம்பலப் படுத்தியிருந்ததே?**

  *அதுக்கு என்னாங்கறேன். புலி எட்டடி பாஞ்சா, குட்டிக பதினாறடி. பேரக்குட்டிக ஒரு முப்பத்தஞ்சு தாவும். அது சரி. ஒனக்கு எதுக்கப்பா இது? இது தனிப்பட்ட விவகாரம். அதாவது அவுங்கவுங்க பேரன் – பேத்தி – தாத்தா சம்பந்தமான குடும்ப விவகாரங்கறேன்.*

- **அண்மையில் ரசித்த படங்கள் இரண்டு?**

  *1. குடும்பம் ஒரு கோயில்*
  *2. நெற்றியடி*

- **அண்மையில் ஒய்வுபெற்ற கபில் தேவ் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

  *ம்..... இந்திய ஜனாதிபதிதானே. எப்போது ஓய்வு பெற்றார்? ஏன் பேரன், பேத்தி யாரும் இல்லயோ? போகட்டும். என்னைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருக்கமாட்டார் போல.*

- **மலையக கல்வி பொறுத்து என்ன நினைக்கின்றீர்கள்.**

  *போதும், இது போதும். எனக்கே ஒன்னு ரெண்டு மூணுத்தான் தெரியும். நான் அமைச்சராகலையா? நீ படிச்சி என்னத்த கிழிக்கப் போற?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசனது வரலாற்று நூல்

## பசும் புற்றரையின் விளிம்போரமாய்..

# ஓர் விருட்சம்

மருத்துவனாய்
உருவாக
அனுப்பி வைக்கப்பட்ட
மாணவன்
கைது செய்யப்பட்டு
நின்றான்.

மலையகத்தின் பிற்பட்ட தோட்டப்புறங்களில் ஒன்றைச் சார்ந்த சிட்டன் தோட்டத்திலிருந்து 1940களின் இறுதிப் பகுதிகளில், தன் மகன் சிறந்த ஓர் மருத்துவனாக வரவேண்டும் என்ற ஓர் சீரிய, வசிதிபடைத்த தந்தையின் பாசம் மிகுந்த எதிர்பார்ப்பின் அடிப்படையில், இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஓர் இளைஞன், 1950இல் அப்போதுதான் ஒரு வருடமே பூர்த்தியடைந்திருந்த தனது மருத்துவக் கல்விக்கு ஒரே அடியாக முழுக்குப் போட்டுவிட்டு, ஒடுக்கப்பட்ட ஏழை, எளிய மக்களின் சார்பாய் அன்று எழுந்த அரசியல் அலைகளில் ஒன்றி அதனை ஆராதித்து அதனுடன் கலந்து சங்கமிக்க முனைப்புற்றப் போது, கைது செய்யப்பட்டு நின்றான்.

தனது மகன் சிறந்த ஒரு மருத்துவனாக உருவெடுத்து, அமைதியான, நேர்த்தி மிக்க ஓர் வாழ்வை முன்னெடுக்க வேண்டும் - தமது வயதான காலத்தில் தம்மையும் தமது சொத்துப் பத்துக்களையும் அவதானமாய் பார்த்து, கட்டிக்காத்து, தன் குழந்தை குடும்பங்களோடு அமைதியான வாழ்வை அரவணைத்து சமூகம் போற்ற வாழ வேண்டும் என்று எண்ணியிருந்த ஓர் தந்தையின் கனவு சிதறுண்டது.

தனது மருத்துவக் கல்வியை பூர்த்தி செய்யாமல் சந்தோஷமாய் நாடு திரும்பிய இந்த இளைஞன், தன் நாட்டில் காலடி வைத்தவுடன் செய்த முதல் காரியம், தனது தோட்டப் புறங்களில் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு கேவலமாய் ஈவிரக்கமற்ற வகையில் சுரண்டப்பட்டு வந்த தொழிலாள மக்களின் மத்தியில், அவர்களை ஒழுங்கமைக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாள இயக்கங்களில் ஒன்றில் தன்னையே ஒப்படைத்துதான்.

அன்றிலிருந்து இன்று வரை தனது சுக துக்கங்களை மலையக மக்களின் சுக துக்கங்களோடு ஒன்று சேர கட்டிப் போட்டுவிட்டு, தனது தனிப்பட்ட வாழ்க்கையை என்றோ எங்கேயோ தொலைத்துவிட்டு வெகு தூரம் நடந்து வந்துவிட்டு நிற்கும் இந்த இளைஞனின் வாழ்க்கை, அவ்வப்போது பலராலும் 'வாழ்க்கை விவேகத்துடன்' நோக்கப்பட்டு விமர்சனத்துக்கும் உள்ளாக்கப்பட்டு வந்துள்ளது, பலரும் அறிந்த ஒன்றே.

அவ்வளவும் வீணடிப்புத்தானா - என்பதே அவ் விமர்சனங்களின், கேள்விகளின் சாராம்சமாகும்.

இன்று இவ்வளவு நாள் சென்று - 'இல்லை, மன்னிக்கவும். எனது வாழ்க்கை முடிவுகள் வெறும் வீணடிப்பு அல்ல' என்று குறிப்பிடத்தக்க அளவு பேரோசையுடன் பதில் கூறி, பிரகடனம் செய்யும் வகையில், அவனது வாழ்க்கை நெறியின் விளைபயனாய், வடிவமைந்து, வெளிவந்துள்ளது. இவ்விளைஞனின் முதல் நூல்: 'மலையக மக்களின் ஒரு வரலாறு' - ஆக்கியோன் - எஸ். நடேசன்.

கிட்டத்தட்ட 400 பக்கங்கள் அடங்கிய இப்பிரமாண்ட மான ஆய்வு நூலின் முன்னுரையில் திரு. நடேசன் பின்வருமாறு எழுதுகின்றார்.

> "இந்திய தொழிலாள மக்களது வரலாறொன் றை எழுதும் முகமாக குறிப்புகளையும் பத்தி ரிகை செய்திகளையும், இங்கிலாந்தின் தொல் பொருள் ஆய்வு கூடம் உட்பட பல்வேறு வகைப்பட்ட வாசக சாலைகளில் இருந்து தேடிச் சேகரித்து வந்தேன்".

ஒரு புறம், இங்கிலாந்தில் தான் கழித்த காலத்தின் போது கூட தன் சிந்தையை முற்றாய் ஆக்கிர மித்திருந்த விடயத்தின் தொனிப் பொருள் யாது என்பது குறித்து இப் பந்தி எமக்கு தெரியத்தரும் அதே வேளை, இந்நூலுக்கான ஆய்வு எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்து பட்ட ரீதியில், ஆழமான பிரஞ்ஞையுடன் கொண்டு நடாத்தப்பட்டுள்ளது என்ற உண்மையையும் இது எமக்கு தெரியத்தருகின்றது.

ஏழ்மைப்பட்டுப் போன இந்திய தமிழ் நாட்டு விவசாயிகளை இங்கு ஆள்கட்டி வருவதற்கு முன்னோடியாக - வரி கொடாத அந்த ஏழ்மைப் பட்டுப் போன இந்திய தமிழ் நாட்டு விவசாயிகளின் முதுகுகளில் எப்படி கற்கள் ஏற்றப்பட்டு காலை 8 மணிமுதல் கொதிக்கும் பாலை வெய்யிலில் நிறுத்தப்பட்டார்கள், அவர்கள் வந்த விதம், வேர் கொண்ட விதம், மலையக தொழிலாளர் போராட்ட தளங்களின் முன்னோடிகளில் ஒன்றான முல்லோய தோட்டத்தில் தொழிளாளரின் ஆவேசமிக்க எழுச்சியின் போது முன் அணியில் நின்ற தொழிலாளன் கோவிந்தன் எப்படி சுடப்பட்டு இறந்து வீழ்ந்தான் என்பதை நேரடி சாட்சியான பன்னிரண்டு வயது சிறுவன் ராமையா எப்படி விசாரணை குழுவின் முன்னிலையில் கூறினான் என்பது முதற்கொண்டு மிக விரிவாக மலையக மக்களின் வருகை, தொழிற்சங்க உருவாக்கம், அவற்றின் போராட்டம், மலையக மக்களுக்கு எதிராய் இயற்றப்பட்ட சட்டங்கள், அவற்றின் பின்னணிகள் அவ்வவ் காலக்கட்டத்தின் போது பல்வேறு வகைப்பட்ட சக்திகள் எடுத்த நிலைப்பாடுகள், மலையக மக்களுக்கு எதிராய் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித் தனமான வன்செயல்களின் அராஜகம், மலையக சக்திகளினாலேயே மலையக தொழிலாளரின் நலன்கள் சமயங்களில் காட்டிக் கொடுக்கப்பட்ட விதம் - இவற்றின் தொகுப்பாய், இவற்றின் நுணுக்கமான விவரண சித்தரிப்பாய், ஓர் விசாரணையாய் இவ் ஆய்வு நூல் விரிகின்றது.


ஆனால் இவ்விவரிப்பு யாவுமே திரு. நடேசனின் தனிப்பட்ட கருத்து, அவா என்ற வகையில் முன் வைக்கப்படாமல் தான் கூறும் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு சிறிய விடயத்திற்கும் ஆழமான ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்த சான்றுகளை மேற்கோள் காட்டி அவற்றினூடு மலையக மக்களின் வரலாற்றை திரு. நடேசன் படம் பிடித்துக் காட்டியிருப்பதே இந்நூலின் குறிப்பிடத்தக்க அம்சமாக உளது.

இவ்விபரத் தொகுப்பின் பரந்துபட்ட செழுமை காரணத்தினாலே என்னவோ, கலாநிதி குமாரி ஜயவர்தனா அவர்கள் கூட இந்நூலுக்கான தனது அறிமுகத்தில் பின்வருமாறு கூறி நிற்கின்றார்:

> " திரு. நடேசனால் மிக சிறப்பாக தொகுக்கப் பட்டுள்ள மலையக மக்களின் துணிகரமும் வீரமுமிக்க இப்போராட்ட வரலாறானது சாதாரண வாசகனுக்கு மாத்திரமின்றி இவ் விடயங்களில் புலமை கொண்டோருக்கும் பெரிதும் தேவைப்படும் மூல நூலாக திகழும்"

நூல்களையும் ஓர் 600க்கும் மேற்பட்ட சான்று குறிப்புகளையும் மேற்கோள்காட்டி எழுதப்பட்டுள்ள இந்நூல் கலாநிதி குமாரி ஜயவர்தனா போன்றோரி டமிருந்து மேற்படி அங்கீகாரத்தை தட்டிக் கொண்டதில் வியப்பொன்றுமில்லைத்தான்.

ஆனால் விடயம் அத்துடன் முடிந்ததாக இல்லை.




இவ்வரலாற்று நூலின் அடிநாதம் மலையக சமூகத்தினர்க்கு இந்நாட்டில் இருக்கக் கூடிய, இருக்க வேண்டிய உரிமையை பறைசாற்றுவது மாத்திரமல்ல - ஆனால் ஓர் பரந்துபட்ட சமூக மாற்றத்தின் தேவையை ஒட்டி, அத்தகைய மாற்றத்தை நோக்கி காலம் காலமாக மலையக மக்கள் எவ்வளவு நிர்ணயமாக, தீர்க்கமாக போராடி வந்துள்ளார்கள் என்பதையும் இந்நூல் தெளிவுற காட்டி நிற்பதும் இஃதன் இன்னுமொரு சிறப்பு என்பதனையும் குமாரி ஜயவர்த்தனா தன் முன்னுரையில் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

ஆக, 1950களில் தன் கல்வியை ஓர் அடிப்படைக்காக வெறுமனே மூட்டை கட்டிஎறிந்து விட்டு வந்து ஓர் இளைஞரின் வாழ்வு பாழ்படவில்லை. அவர்தம் தோழர்களின் வாழ்வும் வீண்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளை அவர்கள், புழுதியில் மறைந்த தம் மக்கள் பொறுத்து கூறுவார்:

**வெட்கம்தான் ஏது**
**மானுடனே**
**நீ**
**கல்லறை சமைக்கவும்**
**மறந்தனை அவர் தமக்கே** என்று.

மேலும் கூறுவார்:

**இறைவன் மாத்திரம்**
**பெரும் கருணை கொண்டு**
**மென் பசும் புற்றரையால்**
**மெல்ல**
**போர்த்தி அவரை**
**மூடினான்: மறைந்தார்** என.

மலையக புத்திஜீவிகளின் மனச்சாட்சியிடத்து காலம் காலமாய் ஆணித்தரமாய் வினா எழுப்பும் வேலுப்பிள்ளையின் வரிகளிவை.

ஆனால் நடேசனோ இங்கு முனைந்துள்ளது தன் மக்களின் நினைவாய் ஓர் பசும் புற்றரையை போர்த்தி செல்வது மாத்திரமன்று.

மாறாக அவர் முனைந்துள்ளது நினைவுக்கு ஓர் பசும் புற்றரையுடடன், கூடவே ஓர் புதிய விருட்சத்தின் செழிப்பான முகிழ்த்தலுக்காய் ஆரோக்கியம் மிக்க ஓர் வித்தினையும் விட்டு செல்வதே. இன்னும் அநேக பசும் புற்றரைகளை உருவாக்க இது தொழிலாளர் சார்ந்த இளைஞர்களிடம் உத்வேகம் ஊட்டும் அதே வேளை இதன் தாற்பரியம் குறித்து மலையக சமூகம், தனது, ஏனைய, ஒடுக்கப்பட்ட சமூகங்களுடன் இணைந்தே கவனத்தில் கொள்ளும் எனலாம்.

**(வெளியீடு: நந்தலாலா)**

**கார்க்கி இலக்கியம்**

*விளிம்போரத்தில் சின்ன எழுத்துக்களில் எழுது: நான் தீர்ப்புக் கூறவில்லை. சாட்சியாக மட்டுமே இருக்கின்றேன். நல்லது. இப்போது அதற்குக் கீழே தள்ளி எழுது. மனிதனின் வாழ்க்கை பறந்தோடி செல்கிறது. ஆனால் அவனது செயல்கள் பல சகாப்தங்களுக்கும் அப்பால் வாழக்கூடும்.*

**பிரமச்சாரியின் டயறி**

# காஃப்காவிற்க்கு எதிராய்

## நாதின் கோர்டிமெர்

தந்தைக்கு கடிதம் என்று காஃப்கா எழுதி அனுப்பாமல் விட்டு விட்ட கடிதத்திற்கு எதிர்வினையாக, மகனுக்கு கடிதமாய், கோர்டிமெர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி:

படுக்கையின் மேல் உன் பெற்றோரின் பைஜாமாக்களும், இரவு ஆடைகளும் விழுந்து கிடக்கும் காட்சியை நீ வெறுத்த விஷயத்தை எல்லோரும் படித்துத் தெரிந்து கொள்ளும்படி செய்துவிட்டுப் போய் விட்டாய். மற்றவர்களைப் போல் என்னையும் மனம் திறந்து பேச விடு. நீ அந்த படுக்கையில்தான் உருவாக்கப்பட்டாய். நீ புனிதமாக கருத வேண்டும், மிக உயர்ந்த பட்ச மரியாதையைக் காட்ட வேண்டும் என்று நான் நினைக்கும் ஒரு இடம் உனக்கு அருவருப்பளிக்கிறது என்பது எனக்கு அருவருப்பைத் தருகிறது.

நன்றி : சதுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்கக் கடிதம்

பகிரங்கக் கடிதம்
பகிரங்கக் கடிதம்

இ.தொ.க. முன்னாள் கணக்காளர்

## இ. தம்பிராஜா

அடகு வைத்த

## தொண்டமானுக்கு

எழுதிய பகிரங்கக் கடிதத்தின்

## சில சுவையான பகுதிகள்

1. நுவரெலியாவில்,* இல. 10, லேடி மக்கலம்ஸ் டைவிலுள்ள, ஒன்பதரை லட்சம் பெறுமதியான இ.தொ.க. சொத்து தொண்டமான் பெயரில்.

2. பிழையான வழிகளில் வந்து குவியும் நிதி, நன்கொடைகளால் வரையறையற்ற சொத்துக்கள் சேர்வதும், தேவையில்லாமல் செலவு செய்யும் தலைமைத்துவத்தில் உள்ளவர்களது ஊதாரித்தனமும் அதிகரித்து வருகின்றன.

   இ.தொ.க. முன்னாள் உபதலைவர்
   ஜெ.பெரியசுந்தரத்தின் ராஜினாமா
   கடிதத்தின் ஒரு பகுதி (17.9.88)

3. சாதாரணமாக ஒரு ஆறு மாதக் கட்டிடமானது 18-24 மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்படிருக்க வேண்டும். ஆனால், (இ.தொ.க. 72, ஆனந்த குமாரசுவாமி ம ாவத்தையிலுள்ள கட்டிடம்) இப்பொழுது ஆறு வருடங்கள் முடியும் தறுவாயிலும் நிறைவு பெறாது ஒரு நான்கு மாடி கட்டிடமாக உள்ளது.

4. காணியையும் கட்டிடத்தையும் (அதே தலைமை அலுவலகம்) ஒருபோதும் மீட்க முடியாது என்பது தெரிந்து கொண்டே அடமானம் வைத்துள்ளீர்கள்.

5. நீங்கள் செய்கிற மடத்தனமான செயலை அறியாமையால் அல்ல, தெரிந்து கொண்டே உங்களுக்கு தொடர்ந்தும் ஆமாம் போடும் மனிதர்களாகவே இருக்க விரும்பியதால் ஏற்றுக் கொண்டனர்.

6. உங்களுக்கு பத்திரிகையாளர்களுடன் நல்ல உறவு உண்டு. ஒரு [illegible] சூடா மன்னர் என்றும், தோட்டத் தொ[illegible]சமான தன்னிகரில்லாத த[illegible]ன் என்[illegible] உங்களுக்கு அவர்கள் பட்டம் வழங்கி கௌ[illegible]த்துள்ளனர்.

7. எல்லோரும் உங்களுக்கு 4 லட்சம் உறுப்பினர்கள் உள்ளதாகவும் உங்களிடம் 1 மி[illegible]யன் வாக்குகள்* இருப்பதாகவும் நீங்கள் கூறுவதை நம்புகின்றனர்.

இந்த புரட்டல் கதையை, உண்மை விபரங்கள் தெளிவாக்க வல்லன 1981 முதல் 1988 வரையான சராசரி அங்கத்தவர் தொகை வருமாறு:

| | | |
|---|---|---|
| 1981 - 82 | - | 160,000 |
| 1982 - 83 | - | 159,000 |
| 1982 - 84 | - | 152,000 |
| 1984 - 85 | - | 153,300 |
| 1985 - 86 | - | 135,300 |
| 1986 - 87 | - | 146,800 |
| 1987 - 88 | - | 164,300 |

8. மக்களை உங்களது இடுக்கிப் பிடியிலிருந்து விடுவிக்கவும் தமக்கு உரித்தான சொத்துகளையும் பணத்தையும் காலம் கடந்து விடமுன் பெற்றுக் கொள்ளவும் வேண்டுமென்பதற்காகவே இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

- நன்றி சரிநிகர் - இதழ் 59

## கார்க்கி இலக்கியம்

- 'நீங்கள் என்ன இப்படி பேசுகின்றீர்கள்?'
- 'எப்படி பேசுகின்றேன்'
- 'என்னவோ யாரும் உங்களை துன்புறுத்தாத மாதிரி'
- 'இந்த உலகில் துன்புறாத ஆத்மா எங்கே அம்மா இருக்கிறது'

– தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டிருப்பாய் காற்றே...

தேயிலை தோட்டத்திலே.
(IN THE TEA GARDEN)
(1954)
– சி.வி. வேலுப்பிள்ளை –

நன்கு பண்படுத்தப்பட்ட ஓர் இருதயத்தை, மலையகம் தன் வரலாற்றால் வருடிய போது இயல்பாய் உருண்ட எழுத்துக்கள் இவை.
வேலுப்பிள்ளையின், '*தேயிலைத் தோட்டத்திலே*' எனும் இந் நீள் கவிதை ஏற்கனவே திரு. சக்தீ பாலையாவால் மொழிபெயர்க்கப்பட்டிருந்த போதிலும் சற்றே வித்தியாசமான நடையில் கீழே தரப்படுகின்றது.
தொடர்ந்து வரும் இதழ்கள் கவிதையின் தொடர்ச்சியை ஏந்திவரும்.

## மலைகளைக் கேளுங்கள

பிரட்டின் அதிர்வு.....
ஆம்
அது
மீள் ஒலி எழுப்பி
நெடு .... மூச்.... செறியும்....
அமைதி காக்கும் - இம்
மலைகளின் மீதும்
சப்தமே அற்ற - இப்
பள்ளத் தாக்குகள் நெடிதும்
மீள் ஒலி எழுப்பி
நெடு... மூச்.... செறியும்....

மோனமாய்
நிற்கும்
இவையோ
இங்கு
காலம் காலமாய்
காத்திடும் தம் பதிவை .....

ஓர் நூற்றாண்டு காலத்து
எலும்புகள் குறித்தும்
ஓர் நூற்றாண்டு காலத்து
வியர்வை குறித்தும்
ஓர் நூற்றாண்டு காலத்து
கண்ணீர் குறித்தும்
தம்முள் பதித்துள்ள
வரலாற்று கணக்கினை
நெடுநீள் மரபுடன்
விழிப்புறக் காக்கும்.

## எனது மக்கள்

எனது மக்கள் காள்.....
ஓ .....
அவர் தாம்
புழுதியின் கீழ் புழுதியாய்
தேயிலையின் கீழே.....

நினைவோ சின்னமோ
ஏதுமே அற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து அவர்தம்
கல்லறை குழியினுள்,
துணைக்கு ஓர் சிறு
கானகப் பூவதன்
அணைப்போ உறவோ நெருக்கமோ
இன்றி
ஏகாந்தமாய் உறங்குகிறார் நன்று.

தந்தை புதைந்த
மேட்டின் மீதே
மிதித்து உழன்று
நின்று ஓய்ந்த
தனயனும்
தளர்ந்து வீழ்ந்து
இறந்தே போனான்.

வெட்கம்தான் ஏது
மானுடனே - நீ
கல்லறை சமைக்கவும்
மறந்தனை அவர் தமக்கே....

இறைவன் மாத்திரம்
பெரும் கருணை கொண்டு
மென் பசும் புற்றறையால்
மெல்ல
போர்த்தி அவரை
மூடினான்: மறைந்தார்●

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

---

## வேலுப்பிள்ளையின் சமர்ப்பண வரிகள்

*நாழிக்கு நாழி*
*வீதியில் நின்று*
*என்*
*யாழினை எடுத்து*
*என் கீதத்தை*
*இசைப்பேன்......*

*என் பாடல்கள் யாவும்*
*ஈழத்தின் மானுடர்க்காய்...*
*வயல், புல்வெளிகளிலும்*
*ரப்பர், தேயிலை தோட்டங்களிலும்*
*பிறந்திட்ட மானுடர்க்காய் .....*
*ஆம் நான் காதலிக்கும்*
*அவர்களுக்காய் .......*

(கடந்த இதழைத் தவறவிட்டவர்களுக்காய்)

## பொழுதின் கணத்தில்....

*பிரட்டின் அதிர்வில்*
*விடியலே அதிர்ந்து போய்*
*தேயிலை மீது*
*சரிந்து கிடந்தது.*

*விடியல் பொழுதின்*
*ஆக்கிரமிப்பின் முன்னர்*
*இறுதியாய் சொட்டும் - இப்*
*பனித்துளி புதிது.*

*பொருந்தும் இந்த*
*பொழுதின் கணத்தில் தான்*
*துயரும் நோவும்*
*நசிவும் இறப்பும்*
*இம் மக்களின் மூச்சில்*
*இவ் வாழ்க்கையின் முகிழ்ப்பின்*
*அம்சம் ஒன்றென*
*ஆகிப் போயின.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தா, தாத்தா, தாத்தா

ரகசிய கடிதம்
ரகசிய கடிதம்
ரகசிய கடிதம்
ரகசிய கடிதம்

**சென்றமுறை, தோட்டங்களின் தனியார் கையேற்பை தொடர்ந்து, மலையகத்தில் ஆங்காங்கு ஆயிரக்கணக்கில் குமுறிய தொழிலாள நெஞ்சங்களின் உணர்வுகள், இதய ஒலிகளை 'பேட்டி' வடிவில் பதிவு செய்வு தந்திருந்தோம். இன்றைய பிரச்சனைகள், இக்கடித வடிவில் ...............**

குரங்கு மலை தோட்டம்
புல்லுமலை டிவிசன்
அட்டன்
20.12.1994

அன்பின் தாத்தாவுக்கு,

உங்க ஐந்து லட்ச பேராண்டிகளில் ஒருவனான தேவராசு வணக்கத்துடன் எழுதிக் கொள்ளும் கடிதம் இது.

தாத்தா, தாத்தா, நாங்கள் சேமத்துடன் இருக்கின்றோம். உங்க சேமம் குறித்து கவலையுடன் இருக்கின்றோம். உங்க தற்போதைய நிலைமையை நாங்க அறிவோம் தாத்தா. நீங்க கவலையே கொள்ளக்கூடாது. மன உறுதி தளர்ந்து விடக்கூடாது.

சந்திரிக்காவின் புடவ தலைப்பில் நீங்க இறுக்கமாக தொங்கிக் கொள்ள மேற்கொள்ளும் பகீரத பிராயத்தனத்தை நாங்க உளமார வரவேற்கிறோம். பாராட்டுகிறோம் தாத்தா. அவளது புடவ தலைப்பு என்ன அத்தனை மசுரா தாத்தா? அந்த காவடி, அன்ன காவடி என்று ஆட்டம் ஆட்டமாய் போட்டுக் காட்டிய உங்களுக்கு இதெல்லாம் ஒரு தூசு என்பது எங்களுக்கு நல்லாவே தெரியும். ஆகையினால், தாத்தா, தயவு செய்து உங்க கோணாங்கி ஆட்டத்த மாத்திரம் நிறுத்தி விடாதீங்க. தயங்காமல் சொல்லிடுங்க. – உங்க சொந்த பேராண்டி கூட சந்திரிக்காவுக்குத் தான் பாராளுமன்ற தேர்தல்ல ஓட்டு போட்டாருன்னு,

பாருங்க தாத்தா, பேராண்டிய பற்றி பேச்செடுத்ததும் தான் உங்க பழைய பேச்சு நினைவுக்கு வருது.

நினைவிருக்கா தாத்தா, ஒருமுறை எங்க தோட்ட காடெல்லாம், ரோட்டு ரோட்டா உங்க பேச்சு, அதான், 'நான் செருப்ப வெச்சு போட சொன்னாலும் ஓட்டு போடுவாங்களே' ங்கர கத தூள் பறந்த விதம்.

இப்ப, இங்க என்னான்னா தாத்தா, ரெண்டொரு சந்திரசேகரன் ஆட்கள், 'அப்படின்னா செருப்ப விட பேரனுக்கு கொறஞ்ச மவுசோ' அப்படின்னு குதர்க்கம் பேசுறானுங்க தாத்தா. இது சரித்தானா? பேரன் பத்தாயிரம் ஓட்டு கொறச்சலா வாங்கிட்டார் அப்படிங்கறதுக்காக இந்த பேச்சு பேசலாமா தாத்தா? அப்படியே, எனக்கு, மொகரையெல்லாம் குத்தி உடைக்கணும் போல தோணுது.

ஆனா பரவாயில. திரு முருகன் கிருபையால என்ன கும்புடு போட்டோ, என்ன ஆட்டம் ஆடியோ எப்படியோ ஒரு மாட்டு மந்திரி (அதான், காலு நட) பதவிய மவுசா வாங்கி போட்டுடீங்க.

சந்தோஷமாயிருக்கிறது தாத்தா, கவலையே படாதீங்க. படக்கூடாது. ஏன் என்கிறீங்களா? அதான், எங்க தோட்டக்காட்டு மக்கள் இருக்காங்களே. போதாததுக்கு, வீசுர எலும்புக்கு பல்ல சிலுப்பிக்கிட்டு, பல்லக்கு தூக்க ரெண்டொரு படிச்ச பட்டதாரிகளும்தான் இங்க இருக்காங்களே. பெறகு என்ன தாத்தா கவல. எதுக்கு கவல?

இவுங்கெல்லாம் இருக்கிற வரைக்கும் தோட்டங்கள்ல ஒரு மயிரும் அசையாது தாத்தா. அசைய விட மாட்டோம்ங்கிறேன்.

நினவிருக்கா தாத்தா. தோட்டங்கள கம்பெனி காரனுக்கு கொடுக்கிறதுக்கு முன்னாடி என்னான்னா வித்த காமிச்சோமின்னு.

தோட்டத்து தொழிலாளி ஒவ்வொருவருக்கும், தோட்டத்துல பங்கு தரப்போரமுன்னு, அவுங்க முழியில வெரலவுட்டு ஆட்டையில எப்படி தலைய ஆட்டிக்கிட்டு கெடந்தாங்க பசங்க?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்ன, கம்பெனி எடுத்த பெறகு பங்காவது, வங்காது..ஹா...ஹா... பங்கு கொடுக்கவா நாங்க கம்பெனிகாரனுக்கு கொடுத்தோம்? என்னா, கம்பெனிக்காரன் தொழிலாளிக்கு மாமனா மச்சானா?

ஆனா தாத்தா, நம்ப ஆளுங்க அதுல இருந்து முழுசா முழிக்கிறதுக்கு முன்னாடி, விட்டிங்களே தாத்தா ஒரு கரடி – ஐயோ, நம்ப கண்டி மாகாணசபை மெம்பர் எல்லாத்தையும் கடத்திக்கிட்டு போயிட்டானுங்க – ஐயோ, செல்லசாமி என்ன முதுகுல குத்திப்புட்டான் – ஐயோ, அம்மாடி தோட்டத்துல உடாதிங்க உடாதிங்க அப்படின்னு, லபோ, லபோன்னு கதறிக்கிட்டு – படு ஜோர் தாத்தா, படு ஜோர்.

ஆனா, அது கெடக்குது, மசுரு. 'வீடு' கத இருக்கே....! ஹஹ்ஹா.... படு கில்லாடி தாத்தா நீங்க.

மே மாசம் முப்பதாம் தேதி எல்லாத்துக்கும் வீட்ட எழுதி கொடுத்துருவோம் அப்படின்னுட்டு எப்படி எப்படி மாகாண சபை ஓட்டெல்லாம் வளச்சு போட்டுக் கிட்டோம்.

பெறகு, இப்ப, இந்த, தோர்தல்ல அத விட 'அப்பனா' ஒரு வீட்டு சர்ட்டிபிக்கேட் தமாசு.

தாத்தா, தாத்தா, இந்த சர்ட்டிப்பிக்கெட் விஷயம்தான் தாத்தா நான் நல்லா மனசார ரசிச்சி அனுபவிச்ச நம்பர் வன் ஏமாத்து.

தாத்தா, தாத்தா, அடுத்த தரம் வேற எதையும் நம்ம யோசிக்கனும் – சிங்கமல, சிவனொளிபாதமல, கொரங்கு மல, பிதுருதலா கல மல – இதெல்லாம் எழுதி, சொந்தமுன்னு வச்சிக்க – அப்படின்னு சர்ட்டிப்பிக்கெட் கொடுத் துருவோமா – சொல்லுங்க தாத்தான்னா...

அட, இப்பத்தான் நெனப்புக்கு வருது தாத்தா, இந்த தடவ ஒங்க பொறந்த நாளுக்கு ஒன்னுமே என்னால அனுப்ப முடியலியே. (எண்பத்தி ரெண்டு ஆச்சில)

**அக்கரை**

இவையென்ன விந்தை பயங்கள்?
வீட்டிலே இருட்டு!
இவையென்ன அபஸ்வரங்கள்?
அறுந்தது தந்தி!
அவையென்ன வண்ண நிழல்கள்?
மரணமும் வாழ்வும்!
எங்கே நின் இரவுப் பயணம்!
அப்பக்கக் கரைக்கு

– மனிதனே என் செய்தி
மனிதனே என் இசை
என்ற மிக சிறந்த வரியினைக்
கூறிய கவிஞன் ஸ்ரீ ஸ்ரீ

போன தடவயாவது, சின்னவரு, ஒங்க பேராண்டி, கொட்டகலைல ரெண்டு வளவு கட்டி தொங்க வச்சாரு – எங்க தாத்தாவுக்கு பொறந்த நாளுன்னு.

ஆனா பாருங்க – நம்ம ஆளுங்க வெளங்காத வனுங்க – செலப் பேரு சொல்லிக்கிட்டானுங்க – ஆமா, மசுர, முந்தியெல்லாம் சும்மா போனானுங்க – இப்ப என்னடான்ன தொங்குற தொண்டமான் வளவுள நொளஞ்சி தொங்குற கோதையம்மா வளவுள வெளிய வர்றாங்கன்னு. வெட்டி முண்டைங்க. என்னாப் பேச்சு பேசுறான்னு பாத்தீங்களா? நீங்க கண்டுக்காதிங்க தாத்தா.

செலப் பேரு சொல்றானுங்க வாசக சால கட்டலாம், வைத்திய சால கட்டலாம் இந்த செலவுலன்னு. கட்டலாம், கட்டலாம். இப்பவே இந்த கேள்வி கேக்குறானுங்க. இனி வாசக சால கட்டி எல்லாரும் வாசிச்சிப் புட்டா, எந்த கேள்வி கேப்பானுங்களோ? ஒங்களுக்கு தெரியாததா தாத்தா இதெல்லாம்?

அது கெடக்குது மசுரு. விடுங்க தாத்தா. சந்திரிகா அரச எப்படி கவிழ்க்கிறது அப்படின்னு நீங்க இப்ப சீரியஸா யோசிச்சிக் கிட்டிருப்பீங்கன்னு எங்களுக்கு நல்லா தெரியும். அப்படிப்பட்ட முக்கியமான நேரத்துல இது என்னா மசுர. ஆனா தாத்தா இந்த மாட்டு மந்திரி பதவிய மட்டும் ஒடனே மாத்த சொல்லுங்க.

அது ஏன் தாத்தா – கடைசியில காலு நட மந்திரின்னு நமக்கு கொடுத்துட்டானுங்க சண்டாள பசங்க. மொத தடவ மாட்டு மந்திரியா நீங்க இருந்தப்போ, ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ரெவ்வண்டு பசு மாடு கொடுக்கப் போரதா சொன்னீங்க. நெனவிருக்கா – ஆயிரத்தி தொளாயிரத்தி எழுபத்தி ஏழுல.

அப்ப என்னடான்னா அந்த சேதிய கேட்டொடன நம்ம பசங்க எல்லாரும் சீம்பாலு குடிக்க, ஜல்லி கட்டு வெளாட எங்க மந்திரி மாடு கொடுக்கப் போராருடான்னு கோவணத்த இறுக்கி கட்டிக்கிட்டு நின்னானுங்க.

இந்த தடவ எத தாத்தா கொடுக்கிறதா சொல்ல போறீங்க. ஒன்னுமே வெளங்கலையே.

நம்ம பக்கம் உள்ள ஸ்கூல் பிரின்ஸ்ப லுக்கெல்லாம் ஒவ்வொரு கெடேரி கொடுத்து, அவுக எல்லாம் மாட்ல ஏறித்தான் ஸ்கூலுக்கு வரனும்ன்னு ரூல் போட்டுருவோமா? சொல்லுங்க தாத்தான்னா....?

ஆனா, எல்லா ஸ்கூல் பிரின்ஸ்பலுக்கும் கொடுக்க கூடாது. எவனெவன் எங்களுக்காக வால (மாட்டு) புடிக்கிறானோ அவனுக்கு மட்டும் மாடு, கன்னுக்குட்டி, பாலு, தயிரு, மோரு எல்லாம் கொடுப்போம்.

சந்திரசேகரனுக்கு சப்போட்டான பிரின்சி பல்லும் இங்க இருக்கிறானுங்க. அவனுங்கலுக்கு வெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரும மாட கொடுப்போம். இல்லாட்டி, ஒன்னுமே வேணாம் தாத்தா. எரும கூட வேணாம். திரியட்டும் அவனுங்க. மாடில்லாம நடக்கட்டும். எங்கள, எங்க மாடுகள பாத்து நல்லா ஏங்கட்டும். ஏங்கி திரியட்டும். தல தெரிச்ச பயலுக. நல்லா வேணும்.

அது சரி, சந்திரிக்கா அம்மா என்னா சொல்றாங்க. எங்கள கண்டுக்கிற மாதிரியே தெரியலையே. மொதல்ல, சீதேவி, உல்லாச பயணத்துறைய கொடுத்தா. பின்ன, டபுக்குன்னு புடுங்கிப்புட்டு வேறொன்ன கொடுத்துட்டா.

மாட்டு மந்திரி நல்லதுனாலும் உல்லாச அமைச்சு மாதிரி வராதுதானே தாத்தா.

எப்படிப்பட்ட அழகுராணி குட்டி யெல்லாம் ஒன்னா நின்னு படம் எடுத்தாங்க – உச்சி மோந்தாங்க – கட்டிப் புடிச்சாங்க. இப்ப இந்த மாட்ட வெச்சு என்னா செய்யிறது. உச்சி மோந்துகிறதா?

மாத்தமாட்டாளா? கேட்டுப்பாருங்க. ஏலவே ஏலாதுன்னா கவுத்துருவோம்.

இல்லாட்டி கொஞ்சம் ஐஸ் வச்சு பாருங்க. எந்த அமைச்சு தந்தாலும் அந்த அமைச்ச கம்பெனிகாரன் கிட்ட குடுத்து, கம்பெனியாக்கி, அதுல பங்கு தர்றதா சொல்லுங்க. இல்லாட்டி அவளுக்கும் ஏதாவது 'வீட்டு சாட்டிப்பிக்கேட்' எழுதி கொடுத்துருங்க. அப்பவும் ஏலாதுன்னா அரசாங்கத்துக்கு பால், தயிர் ஒன்னுமே கொடுக்காதீங்க. கொடுக்கவே கொடுக்காதீங்க.

அடுத்த கெழம, தாத்தா, ஒங்கள வந்து பாக்குறேன். வர்றப்போ கொஞ்சம் மோதகம் கட்டி எடுத்துக்கிட்டு வர்றேன். மாவு வெல கொறஞ்சு ரச்சுத்தானே. ஐயோ நம்ப தோட்டக்காட்டு ஆளுங்கல நம்பவே முடியாது தாத்தா. மாவுவெல கொறஞ்சொடன சந்திரிக்கா நல்லது மாதிரி கதைக்க பாக்குறானுங்க – தாயேளி பசங்க! நாந்தான் சொல்லி வெச்சுருக்கேன் – மாவு வெலய கொறைன்னு சந்திரிக்காவுக்கு சொன்னது யாரு – எங்க தாத்தா தான்னு.

அதனால பயப்படாதிங்க. இது மாதிரி ஒரு அறிக்கைய பேப்பர்ல முடிஞ்சா கொடுத்துருங்க

அது சரி தாத்தா. எத்தன சமாதானம் சொல்லிக்கிட்டாலும் மனச நெருடற ஒரு விஷயத்த கேட்காம இந்த கடுதாசிய முடிக்கவே முடியாது தாத்தா.......

**கார்க்கி இலக்கியம்**

**மரங்களும் பூக்களும் மட்டுமல்லாமல் மக்களுங்கூட பூமிக்கு ஓர் ஆபரணமாக விளங்க வேண்டும்.**

பிரம்மச்சாரியின் டையரி

என்னமோ, ஏயர் லங்கா, ஏயர் லங்கான்னு இங்க கத கதயா கதைக்கிறானுங்க. என்னமோ நாலஞ்சு கோடிய காணோமாம். நீங்க கமுக்கமா இருக்கிறீங்களாம். மூச்சையும் விடாம. ஒடம்பு பதர்றது தாத்தா. இது உண்மைனா நம்ப தோட்டக்காட்டு பசங்களையே களவானி பசங்கன்னு சொல்லிடுவாங்களே. என்னென்னமோ, கதைக்கிறானுங்க. பேரன் ஒன்னுக்கு பொறுப்பாம். பேத்தி மத்தொன்னுக்காம். 'ச்சீ நாறுது' அப்படீன்னு சந்திரசேகரன் ஆளெல்லாம் ஆளுக்கு ஆள் மல மலையா நின்னு கதைக்கிறானுங்க. நாந்தான் சொல்லி வெச்சிருக்கேன். நாலு கோடிய எடுக்கலடா எங்க தாத்தா. அப்பிடியே எடுத்தாலும் அதுல கோயில் கட்டுவாரே தவிர வேறொன்னும் செய்ய மாட்டாருன்னு. சரித்தானே தாத்தா.

அப்பா. கை என்னமா வலிக்குது. எதெத எழுதறது எதெத விடறது.

ஆறு அம்ச கோரிக்கைக்கு என்ன தாத்தா நடக்குது? கமுக்கமா இருங்க. ஏயர் லங்கா, கியர் லங்கான்னு விசாரண கிசாரண வச்சா, இல்லாட்டி தொழிற்சங்க சொத்த அடமானம் வச்சுட்டிங்க – அப்படி இப்படின்னு விசாரன தொடங்குனாங்குன்னா, ஆறு அம்ச கோரிக்கைய நிறை வேற்றாதனாலத்தான், சந்திரிக்காவ உட்டு வெலகுவேன் – அப்பிடின்னு வெலகி யுஎன்பியில சேந்துருவோம்.

பெறகு ஆறு அம்ச கோரிக்கைய நிறைவேத்து, நிறைவேத்து அப்படின்னு தோட்டங்கள்ள ஸ்ட்ரைக்கா அடிக்க சொல்லிருவோம். – செய்யலாம் – அதான், முந்தி, செல்லசாமி பிரச்சனையில கடத்தி புட்டாங்க கடத்திபுட்டாங்க அப்படின்னு ஸ்ட்ரைக் அடிக்க சொன்னோமே – அது மாதிரி.

எவனாவது, அப்பா, முந்தி, ஏன் யுஎன்பிய விட்டு வெலகுனிங்க அப்படின்னு கேட்டா – ஆமா ஆறு அம்ச கோரிக்கைய நிறைவேற்றாததால யுன்பியில இருந்து வெலகி சந்திரிக்காவோட சேந்தேன். இப்ப, ஆறு அம்ச கோரிக்கைய சந்திரிக்கா நிறைவேற்றாததால சந்திரிக்காவ வுட்டு வெலகி யுன்பியில சேர்றேன் அப்படின்னு மாத்தி மாத்தி போட்டுக்கலாம்.

எவனாவது எதிர்த்து பேசுனானுங்கன்னா ஓ... நான் நடு நெலம ....... சொதந்திரமானவன் அப்படின்னு சொல்லி வெரட்டிரலாம்.

கூட பேசுனானுங்கன்னா, முந்தி பட்டம் கொடுத்தாங்களே, ஒங்களுக்கு வீரத் தமிலன் னுன்னு – அத காட்டி தப்பிரலாம் தானே தாத்தா! நான் சொல்றது சரியா தாத்தா? சொல்லுங்கன்னா.

அது சரி. எப்ப தாத்தா இந்தப் பக்கம் வர்றீங்க? தயிர் மோரெல்லாம் வேளா வேளைக்கு பாத்து சாப்பிடுங்க. சூட்டுக்கு நல்லது.

வீடு மேல சத்தியமா, ஆண்டவன் ஒங்களுக்கு ஒரு கொரையும் வைக்க மாட்டாரு. வேற ஒன்றுமில்லை.

ஸ்தோத்திரம் தாத்தா.
உங்க
அன்பான மலையக பேராண்டி
தேவராசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழை காலத்து வரிகள்.

மழையின் வரவிலே
பூமி குளிர்கிறது.
தெறிக்கும் நீர்த் துளி
சிதறும் சாரல்கள்
அடக்கமாய் வடியும்
சலனமற்ற நீர்தாரை
பொரிப்பது போன்ற
ஒய்யார சத்தம்...

மனமும் குளிர்கிறது
கவிதை மலர்கிறது.

– யாரோ

## அடைக்கலம் தேடி....

*சோலைக்குள் வீசியது*
*புயல்!*
*சிறு மொட்டொன்று*
*அகதியானது.*
*அடைக்கலம் தேடி*
*அது எங்கே*
*போகிறது?*
*இதுவோ பாலைவனத்தில்*
*ஈரம் தேடும்*
*ஒரு மழலையின்*
*குரல்*

கானல் நீர்கூடக்
காய்ந்து போய்விட்ட
ஞானப் பெருவெளியில்
நானுமோர் அகதி.

நிழலும் கூடச்
துணைவர மறுக்கும்
வறண்ட பாதையில்
தனித்து நடக்கிறேன்.

சிறிய குடிலும் அரிக்கேன் லாம்பும்
அம்மா கையால் சோற்றுக் கவளமும்
எனக்கென்று இனிமேல் என்றைக்குமில்லை.

மழையில் நனைந்து, புழுதியில் புரண்டு
கிளித்தட்டு கீறிக் கெந்தி விளையாடிய
தேசம் எனக்கினிச் சொந்தம் இல்லை.

பிஞ்சுக் கால்கள் நெஞ்சை மிதித்தும்
பூமித் தாய்க்குக் கொஞ்சமும்
இரக்கமில்லை.

அழகிய உலகில் நான்
அநாதையாய்ப் போனபின்பு
அடைக்கலம் தேடி
யாரிடம் போவது?

– ம.க.

புட்டிக்குள் அடைக்கப்பட்ட
குட்டிச் சாத்தான்.
மது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100703-31
18000
82703-00
20000
62703-
S/Bp.

ஹட்டன் மானுடம் இலக்கிய வட்டத்திற்காக எஸ் சிவப்பிரகாசம் அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்டது.
தனிச்சுற்றுக்கு மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org